# உதயன்

விலை ரூபா 6-00

கட்டர்: 14 வள்ளுவர் ஆண்டு 2029 மார்கழி 17 வெள்ளிக்கிழமை (01-01-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 31


மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# நீதியோடு கூடிய நிரந்தர தீர்வுக்கு ஒத்துழையுங்கள்

## சகல தரப்பினருக்கும் யாழ். ஆயர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 1

இன்று பிறந்துள்ள புத்தாண்டில் நீதியான நிரந்தர தீர்வுக்கு ஒத்துழைக்குமாறு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் தனித்தனியே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எமது மண்ணில் மிக நீண்ட காலமாகக் கொடிய போர் முடிவின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் நம் இனம் அழிந்து கொண்டிருக்கிறது. நம் நாடு வளம் இழந்து போகின்றது.

எனவே நத்தார் — புத்தாண்டுக் காலத்தில் நீதி, சமாதானத்தின் பெயரால் — மனிதநேயம், அன்பின் பெயரால் —

சம்பந்தப்பட்ட அனைவரையும் சமாதானத்துக்காக அழைப்பதாக யாழ். ஆயர் தமது புத்தாண்டுச் செய்தியில் வேண்டுகோள் விடுத்துள்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்துக்கு முடிவு காணப்படவேண்டும்

### ஈ.பி. டி. பி.புத்தாண்டு செய்தி

யாழ்ப்பாணம், ஜன. 1

தற்சமயம் நடைபெறும் கொடூர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர சகல தரப்புக்களும் புதுவருடத்தில் முன்வரவேண்டும்.

இப்படி ஈ. பி. டி. பி. அமைப்பின் சார்பில் அதன் யாழ். மாவட்ட பொறுப்பாளர் வி. கே. ஜெகன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

## யாழ் மாநகர சபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று யாழ். நகரில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதாக அறியவந்தது.

(இ-6)

## கொக்குவில் பகுதியில் நேற்று சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

கொக்குவில் முதல் தட்டாதெரு வரையான பகுதிகள் நேற்று அதிகாலை முதல் சுற்றிவளைக்கப்பட்டு நண்பகல் வரை தேடுதல் இடம் பெற்றது.

தேடுதல் இடம்பெற்ற கொக்குவில், ஆனைக்கோட்டை, வண்ணார் பண்ணை, தாவடி, உயரப்புலம் பகுதிகளில் இருந்து மக்கள் வெளியே செல்லவும், உள்ளே வரவும் அனுமதிக்கப்படவில்லை.

அரச ஊழியர்கள் மட்டும் வேலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதேநேரம் — பாஷையூர் மேற்குப் பகுதியும் கொட்டும் மழையில் நேற்றுக் காலை சுற்றிவளைக்கப்பட்டது.

(இ-3-7-15-17-69-100-139-185)

## ஊரடங்கு தளர்வு

இன்று அதிகாலை பிறந்த புத்தாண்டை முன்னிட்டு யாழ்.அரசாங்க அதிபர் பிரிவு மற்றும் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட உடுவில், வலிகாமம், கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் நேற்று இரவு ஒன்பது மணி முதல் அதிகாலை இரண்டு மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்ததாக பலாலி தலைமையக செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

வடமராட்சி பிரிகேட் பிரிவிலுள்ள சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி, ஆகிய பகுதிகளிலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ-6)

## ஆவரங்காலில் கிளைமோர்

யாழ்ப்பாணம், ஜன. 1

ஆவரங்கால் சந்தியில் இருந்து வல்லை நோக்கிச் செல்லும் பாதையில் நேற்றுக் காலை 7-45 மணியளவில் வீதித்துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் கிளைமோர் குண்டு வெடிப்புக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட சேதவிவரம் குறித்துத் தெரியவரவில்லை.

(இ-15 173)

# இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னியில் கடும் மழை

## குளங்கள் நிரம்பி வழிகின்றன

வவுனியா, ஜன. 1

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக அங்குள்ள குளங்கள் பலவும் நிரம்பி வான்பாய ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாக வெள்ளம் வீதிகளின் குறுக்கே பாய்கின்றது. இதனால் பலவீதிகளில் வீதிப் போக்கு வரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் அதிகரித்ததை அடுத்து குளத்தின் ஒன்பது வான் கதவுகள் புதன்கிழமை இரவு 12. 15 மணியளவில் திறக்கப்பட்டன. மூன்று தொடக்கம் ஏழு வரையான வான் கதவுகள் ஒரு அடி ஆறு அங்குலம் உயரமும் எட்டுத் தொடக்கம் பதினொன்று வரையான வான் கதவுகள் இரண்டு அங்குல உயரமும் திறக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கான பிரதான போக்கு வரத்து துண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரப் பகுதியில் மக்கள் இடம் பெயர்வு

### மழை தொடர்கிறது

திருகோணமலை, ஜன. 1

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக நகரப்பகுதியில் ஆயிரத்து 300 குடும்பங்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளன.

மழை தொடரும் பட்சத்தில் மேலும் பல குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய அபாய நிலை ஏற்பட்டிருப்பதாக அஞ்சப்படுகிறது.

நகருக்கு வெளியே தம்பலகமம், கிண்ணியா, மூதூர் பகுதியிலும் வெள்ள நிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே நாள் காட்டி**

1999 உதயன் நாள் காட்டி இன்றைய உதயனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## 'ராக்கிங்' செய்வதில்லை கிழக்கு மாணவர் உறுதி

மட்டக்களப்பு, ஜன 1

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் இனிமேல் ''ராக்கிங்'' கில் ஈடுபடுவதில்லை என்று மாணவர்கள் நேற்று உறுதி அளித்தனர்.

வணிகபீட மாணவன் சித்திரவதைக்குள்ளாகிய சம்பவத்தையடுத்து பல்கலைக் கழக நிர்வாகம் நேற்றுக் கூட்டிய கூட்டத்திலேயே இந்த உறுதி அளிக்கப்பட்டது.

'ராக்கிங்' குக்கு உட்படுத்தப்பட்ட மாணவன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும்—

அவரது உடல் நிலை தேறி வருவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

'ராக்கிங்' சம்பவத்தைத் தொடர்ந்து பல்கலைக்கழக விரிவுரைகள் நேற்று இடம் பெறவில்லை. (இ-3)

## புதுவருட ஆராதனை

புது வருடப்பிறப்பை ஒட்டி நேற்று யாழ். நகரில் சில ஆலயங்களில் நள்ளிரவு ஆராதனைகள் நடைபெற்றன.

ஊரடங்கு அமுலில் இருந்ததால் பெரும்பாலான தேவாலயங்களில் இன்று காலையே ஆராதனைகள் நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

(இ-3-51)

## வேலைக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லையாம்

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ். நகரில் உள்ள தமது வேலைத்தலத்துக்குச் சென்ற நல்லூர்ப்பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் குறித்து ஐந்து நாள்களாகத் தகவல் இல்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நல்லூர் பண்டாரிக்குளத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்
உயர்திரு. சி. சிவராசா
அவர்களையும்,

பிரதிக் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு. வே. தி. செல்வரத்தினம்
அவர்களையும்,

உதவிக் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு. வி. அருளானந்தம்
அவர்களையும்,

கணக்காளர்
உயர்திரு. இ. இராசதுரை
அவர்களையும்

வலயக் கல்வி ஆலோசகர்களையும், அதிபர்கள், ஆசிரியர்கள், வலய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரையும் இப்புத்தாண்டில் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

பொதிகை சனசமூக நிலையம்,
புலோலி.

(சி-5969)

---

## கிறிஸ்ரல்

சென்ரர்,
நெல்லியடி.

★ கலை, வர்த்தகம்
**A/L - 2001**
ஆரம்பம்: 01—01—99
மு.ப. 9 மணி

★ அளவையியல்
**A/L 2000**
பிரிவு: II
ஆரம்பம்: 02—01—99
மு. ப. 8 மணி
ஆசிரியர்:
V. ரகுமார்

(61822)

---

## MATHS CENTRE

M. M. V. Road, Nelliady.

**A/L 2001**

கலை வர்த்தகம்

| | | |
|---|---|---|
| ★ பொருளியல் | — | திரு. அன்ரனி |
| ★ அளவையியல் | — | திரு. பிரபானந்தன் |
| ★ தமிழ் | — | திரு. கமலரூபன் |
| ★ இந்து நாகரிகம் | — | திரு. ராஜேஸ்கண்ணன் |
| ★ வணிகக்கல்வி | — | திரு. உதயமோகன் |
| ★ கணக்கிடு | [ | திரு. பார்த்தீபன் |
| | | திரு. பிரபாகரன் |

ஆரம்பம்:- 01 - 01 - 99 வெள்ளி 4-30 P. M.

(சி-5971)

---

## மீண்டும் C.C.A

**கலை, வர்த்தகக் கல்லூரி**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 2001**

**கலை, வர்த்தகப் பிரிவு**

ஆரம்பம்: 02 - 01 - 1999
காலை 9-00 மணி

ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | சண் |
| கணக்கீடு | — | நித்தி / கொலின் |
| வர்த்தகம் | — | முரளி |
| தமிழ் | — | தமிழிந்திரன் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | — | இரா. கண்ணன் |
| கிறிஸ்தவம் | — | வசந்தன் |
| அளவையியல் | — | சுரேஷ் |
| நாடகமும் / அரங்கியலும் | — | ஸ்ரீகந்தவேள் |

(61780) - நிர்வாகி

---

நாளை ஆரம்பம்

## விக்னா

கல்வி நிறுவனம்
கலை, வர்த்தக வகுப்புகள்
**A/L 2001**
புதிய பிரிவு ஆரம்பம்
02 - 01 - 99
காலை: 9.00 மணி
அளவையியல்
திரு. சயந்தன்
வினா விடை வகுப்பு:
02 - 01 - 99
மாலை: 3.45 மணி

(61819)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
செல்வன் யோ. பிரதீபன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி யோகராசா**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த வேதனையடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு:- இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள இன்று காலை 8. 30 மணிக்கு வளாகத்திற்குச் சமுகம் தரவும்.

2 ஆம் வருட மாணவர்கள்.
விஞ்ஞானபீடம்,

(61837)

---

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

இன்று முதல்
கமலஹாசன், ஸ்ரீவித்தியா
நடித்த
**அபூர்வ ராகங்கள்**

தினசரி- 10. 30, 2. 30
(பழைய நேரம்)

T. P. No. 070—212223

(61826)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**சின்னத்துரை பூமணி**

பிறப்பு 26—04—1928
இறப்பு 04—12—1998

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கட்டுவனை வதிவிடமாகவும், இணுவிலில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 03- 01- 99 ஞாயிற்றுக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும். இக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது உதவிகள் செய்த அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இணுவில் கிழக்கு,
இணுவில்.

(61817)

---

புலரும் புத்தாண்டில் அனைவரும்
சாந்தி, சமாதானம் பெற்றுவாழ

**எமது வாழ்த்துக்கள்**

விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்



## எரிக் கணேஷ்

**மூக்குக்கண்ணாடி விற்பனையும்**
**தொலைத்தொடர்பு சேவையும்**

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P No. - 2486

(சி/5931)

---

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மதனாவின் மின்னிடும் பொன்னகை பேரழகு

**அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்**
**எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!**

## மதனா ஜுவல்லறி

என்றென்றும் தரமான 22 Gt தங்க நகைகளுக்கு நாடுங்கள்

**மதனா ஜுவல்லறி**
(வின்சர் தியேட்டர் முன்பாக)
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இணை ஸ்தாபனம்;

**மைதிலி ஜுவல்லறி**
190A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(61820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்திவணங்குகிறோம்

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி
அன்னை
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு
யாழ். பல்கலைக் கழகம்
கௌரவ கலாநிதிப் பட்டம் அளித்தமை
செந்தமிழுக்கும் சிவநெறிக்கும்
மக்கள் பணிக்கும் அறவாழ்வுக்கும்
அளிக்கப்பட்ட பெருஞ் சிறப்பாகும்.

ஈழத்தமிழர் இன்னல் நீங்கவும்
மேன்மைகொள் சைவநீதி
சிறப்புற்று விளங்கவும்
எம் அன்னை
இன்னும் பல்லாண்டு நலமுடன் வாழ
துர்க்கா தேவியின் அருள் வேண்டி
அன்னையைப் பணிந்து பரவுகிறோம்.


சதாவதானி கதிரவேற்பிள்ளை
**சனசமூக நிலையத்தினர்,**
**மேலைப்புலோலி, பருத்தித்துறை.**
(61725)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர்**
**கலாநிதி நா. ஞானகுமாரன்**
**அவர்கள்**
பேராசிரியராக உயர்வு பெற்றமையினை
அகமகிழ்ந்து பெருமையுடன்
பாராட்டி,
இவரின் எதிர்காலம் மேன்மேலும் சிறப்புற
மனதார வாழ்த்தி,
இவர் பல்லாண்டு வாழ்ந்து
தமிழ் கூறும் நல்லுலகிற்குத்
தொண்டாற்ற
அருள் பாலிக்குமாறு
எல்லாம் வல்ல
மாலந்தெனி விநாயகப் பெருமானை
உள்ளன்போடு
இறைஞ்சுகின்றோம்.

சதாவதானி கதிரவேற்பிள்ளை
**சனசமூக நிலையத்தினர்,**
**மேலைப்புலோலி, பருத்தித்துறை.**
(61724)

# 2 ஆம் ஆண்டு நினைவலைகளில்...



மலர்வு: 09 — 12 — 1976
உதிர்வு: 02 — 01 — 1997

அமரர்
**திருநீலகண்டன் ஹரிகரன்**

என் அருமை மகனே!
அன்பும் பாசமும் காட்ட அம்மா இருக்க,
உழைத்துத்தர அண்ணா இருக்க,
காலன் உன்னைக் கவர்ந்தானோ?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் இதயத்தில் என்றும்
நீ வாழ்கின்றாய்!

உன் நினைவுடன்
**அம்மா, அண்ணா.**

82, பழம்றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(61670)

# இலவச கல்வி வகுப்பு

கொழும்புத்துறை, ஜன. 1
கட்டைப்பிராய் கோப்பாய் தெற்கு சனசமூக நிலையம் நடத்தும் இலவசக்கல்வி வகுப்பு தினசரி நிலைய மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5-30 மணிவரை 'யுனிசெவ்' ஆதரவுடன் நடைபெற்று வருவததாக நிலையச் செயலாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

(ஐ-30)

# நான்காயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம்

கொழும்பு, ஜன. 1
அரசதுறையில் பல்வேறு பதவிகளில் 4 ஆயிரம் பட்டதாரிகளை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் பொதுத் திறைசேரி கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அடுத்த இரு தினங்களுக்குள் மாதிரி விண்ணப்பப்படிவங்களும் தேவையான விவரங்களும் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படும்.

40 வயதுக்குட்பட்ட வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் இந்த வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும்—

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஓராண்டு பயிற்சி வழங்கப்படும் என்றும் —

இவர்கள் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சிக் காலத்தின் போது இவர்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளைத் துரிதப்படுத்துவதற்காக புதிய பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-6)


**இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்**
**CEDRIC**
**மண்ணெண்ணெய் கேஸ் குகர்**
* சிலிண்டர் தேவையில்லை
* கேஸைப் போன்ற நீலச்சுவாலையுடன் எரியக்கூடியது.
* மணம் இல்லை. கரிபிடிக்காது. காற்று அழுத்தம் தேவையில்லை.

**3500/= மட்டுமே**
**தொலைபேசி இல. 323223**
98, Braybrook Place, Colombo 02.
தலைமை அலுவலகம்
172, Kensington Church Street, Kensington, London. W8 BN
Tel: 0171792 1881 (10 Lines) Fax: 0171 243 8034



**ஏஜண்டுகள் தேவை**
(சி/5850)


# அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்: 14 — 02 — 1919
மறைவு: 21 — 11 — 1998

அமரர்
**சா. பஞ்சாட்சரக்குருக்கள்**

21 - 11 - 98 இல் அமரத்துவம் அடைந்த எமது தந்தையாரின் சபிண்டீகரண, பாஷாண கிரியைகள் இன்று (01-01-99) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அழைக்கின்றோம்.

**ப. விநாயகமூர்த்தி குருக்கள்**

இலங்கை வங்கி அருகில்,
யாழ். வீதி, மானிப்பாய்.
(61764)


# திரேசா தளபாட மாளிகை

THERESA FURNITURE

155, 157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
**தமது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத்**
தெரிவித்துக் கொள்கின்றார்கள்.
உறுதியான தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்:

**திரேசா தளபாட மாளிகை**
(61789)

நல்லூரில்:
உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்புகளை தாமதமின்றிப் பெற்றுக் கொள்வதற்கு:
**'WHEEL MOVERS'** தொலைத் தொடர்பகம்
(நல்லூர் கோயில் முன்பாக)
021 - 2179, 021 - 2443, 021 - 2047

யாழ்நகரில்:
**AUTO SUPPLIERS**
நீரிறைக்கும் இயந்திரம், லான்ட் மாஸ்டர் உதிரிப்பாக விற்பனையாளர்கள் அத்துடன் ரிபோறிங், ரீ சிலீவிங் செய்து கொடுக்கப்படும்.
(61468)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## இசைவகுப்புகள்

1998 ஆம் ஆண்டு O/L மாணவர்களுக்கு விசேட சங்கீத வகுப்புகள். ஆரம்பம். 01-01-99நேரம் 9.00 - 12.00 மணி. தொடர்பு: வாசுகி ரங்கன் 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (61778)

ஓர்கன், புல்லாங்குழல் ஆகிய இசை வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: எஸ். எஸ். றஜீந்திரன், 23, குறோசற் வீதி, சுண்டுக்குளி, (கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அருகில்). (61524)

## விற்பனையாகின்றது

தஞ்சாவூர் வீணை, துவிச் சக்கரவண்டி. மின் உபகரணங்கள் உட்பட வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 15/1, தேவாலய ஒழுங்கை, ஓட்டு மடம், யாழ்ப்பாணம். (61788)

நடைபெற்று முடிந்த - 98 G. C. E. O/L ஆங்கில வினாப் பத்திரம் விற்பனையாகின்றது. ரூபா 12. 00 மட்டுமே! ஆனந்தி, நல்லூர் கோயில் முன்பாகவும் முகுந்தன், கனகரெட்ணம் வீதி, அரியாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (61680)

## திருமணசேவை

திருவாதிரை நட்சத்திரம் 1964 ஆம் ஆண்டு லக்கின பாவம் 41, செவ்வாய்க் குற்றமுள்ள பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள் தேவை. எம்மிடம் அரச, தனியார் தொழில்களில் ஆண், பெண் ஜாதகக் குறிப்புகள் உண்டு. தொடர்பு: திருவெள்ளாறை திருமணசேவை, தா. நிர்மலமூர்த்தி அல்லாரை வீதி, மீசாலை. (61728)

வயது 29 செவ்வாய் 1, திருவோணம் U K Engineer 6அடி உடையவருக்கும் 28 வயது பூசம் Canada Engineerக்கும் படித்த அழகு மணப் பெண்கள் தேவை. Sponser உண்டு. தொடர்பு: ஞாயிறு காலை துரைவிமலா, 958/ 8 K. K. S வீதி, யாழ். நாச்சிமார் கோயிலடி. (61498)

## தவறிவிட்டது

கிருஷ்ணபிள்ளை சூரிய குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (643152479V), விசேட அடையாள அட்டையும் கடந்த 29- 12- 98 அன்று யாழ். சிவன் கோயிலுக்கும் மிட்டாஸ் கடைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 26A, மானிப்பாய் றோட், யாழ். பரிமளா ஸ்ரோர்ஸில், கொடுக்கவும். (61787)

மண்டைதீவு கனகசபாபதி பிரகலாதன் என்பவரது (091205889) விசேட அடையாள அட்டை கொக்குவில் கிழக்கில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொக்குவில் சிவாஸ் ஐஸ்கிறீம் ஹவுஸில் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். (61803)

## மாறிவிட்டது

ஜேர்மனியில் இருந்து எமது முகவரியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தில் வேறு முகவரிக்குரிய கடிதமும் புகைப்படங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு எமது கடிதமும், மற்றும் புகைப்படங்களும் மாற்றிக் கிடைக்கப் பெற்றவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டுகின்றோம்: S. குருநாதன், ஆலடி, துன்னாலை மேற்கு, கரவெட்டி. (61786)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் (Broiler) சேவல், கல் பேட்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 139, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (61804)

இறைச்சிக்கோழி (கல் பேட்ஸ்) விற்பனைக்கு உண்டு. Kg 180/- சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு; 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (61800)

இறைச்சிக்குரிய கல்பேட்ஸ் சேவல் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப் படும். தொடர்பு: இல. 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்) (61667)

## திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணை சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி (கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (61553)

## தேவை

சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் K. K. S, பலாலி வீதிகளுக்கு அண்மையில் விரும்பத்தக்கது. தொடர்பு: இல. 831 மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (61 757)

---


## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## THE JAFFNA EDUCATION CENTRE

சாந்தி சினிமா முன்பாக (மேல்மாடியில்)

**SPOKEN ENGLISH**
WITH
**GRAMMAR**
சிங்களம்
**SHORT HAND & TYPING**
ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
சான்றிதழ் வழங்கப்படும்.

புதிய பிரிவு ஆரம்பம்: 01 - 01 - 99

(61755) - இயக்குநர்


---

## நீங்காத நினைவில் மூன்றாம் ஆண்டு



அன்னை மடியில் 13 — 03 — 1956

ஆண்டவன் அடியில் 05 — 01 — 1996

அமரர்

### முத்துக்கிருஷ்ணர் சிவகுமாரன்

(மாயவர்) (குமார்)

திதி: 01- 01- 1999

எங்கள் அன்புக்குமாரா!
ஆலமரம் போல் நீயிருந்தாய்! அதில்
சிறுபறவைகள் போல் நாமிருந்தோம்
காலத்தின் கோலமதால் ஞாலத்தில் எமைப்
பிரிந்து எங்குற்றாயோ?
மூன்றாண்டுகாலம் முன்னோக்கிப் பார்க்கையிலே
தாங்காத துயரத்தில் தத்தளிக்குதடா எம்மனது!
நீங்காத உன் நினைவோடு நித்தம்
வாழுகிறோம் இப் புவியில்!

உன்பிரிவால் வாடும்
**தாய், பிள்ளைகள், சகோதரர்கள்.**

(சி/ 5966)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சங்கரப்பிள்ளை தம்பிமுத்து

(ஓய்வுபெற்ற கமநல உத்தியோகத்தர்)

மலர்வு 23-04-1927

உதிர்வு 12-01-1998

(திதி: 01-01-1999)

அன்பின் திருவுருவாய் எம்முடன்
கலந்திருந்து
அணையாத ஒளிவிளக்காய்
ஒளிவீசினீர்கள்
நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது.

மருமகள்
**நா. கலைச்செல்வி.**

''முத்தகம்'',
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(சி/5961)

---


அனைவருக்கும் எங்கள்

## மகிழ்வுறு புதுவருட நல்வாழ்த்துக்கள்

உரித்தாகட்டும்.

உங்கள் நகைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய
நீங்கள் நாடவேண்டிய இடம்:

## கணேசா நகையகம்

இல. 194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வவுனியாவில்
**கணேசா நகையகம்**
இல. 123, பஜார் வீதி,
வவுனியா.

கொழும்பில்
**யாழ். கணேசா நகையகம்**
இல. 134, முதலாவது மாடி,
அறை இல. 4,
செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
T. P. 326252

(61816)


---




சாமியே சரணம் ஐயப்பா!

## ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று தேர்த் திருவிழா

அந்தச் சிதம்பரத்தில் எண்ணியதை திண்ணமுறச் செய்திடும் என்றும் உள்ள பரம்பொருள் பார்த்த சாரதியின் மைந்தன் மணிகண்டன், பிள்ளையார், முருகன், நடேசர், அம்மன், மாணிக்கவாசகர் ஆகியோர் ஐந்து தேரில் ஆரோகணித்துவந்து அருள்மழை பொழியும் கண்கொள்ளாக் காட்சியைகண்டு அருள்பெறுவீர்.

**மணிகண்டன் தரகு சேவை நிலையம்**

இல. /423, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(61813)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர்

## பிறக்கும் புத்தாண்டில் இருந்து நல்லவராக வாழ உறுதிகொள்க!

இனிய புத்தாண்டை இதயத்தால் வரவேற்போம். இருபதாம் நூற்றாண்டின் நிறைவு ஆண்டே, எமக்கு நிம்மதியை நீ தரவேண்டும் என வந்தனை செய்வோம்.

பிரியாவிடை பெறும் கடந்த ஆண்டில் நாம்விட்ட பிழைகளை ஒருகணம் நினைப்போம். புதிய ஆண்டில் தவறு இன்றி வாழத் திடசங்கற்பம் கொள்வோம். சென்ற காலத்தில் நாம் சாதித்த நல்ல கருமங்களை நினைந்து மகிழ்வோம். எதிர் காலத்தில் எண்ணிய கருமங்களை எளிதாய் நிறைவேற்ற நினைப்போம்.

உலகம் இனியது; உலகை இனியதாக்க வேண்டியது அதில் வாழும் ஒவ்வொருவரதும் கடமையாகும். மனிதம் என்றும் மானுட நேயம் என்றும் மனிதன் தனக்குத்தானே நல்லன பல சொல்லி உயிர்களில் தாம் உயர்ந்தவராகப் போற்றுகிறான். எனினும் உயிரினங்களிலேயே உயர்ந்தவனாகக் கருதிக் கொள்ளும் மனிதனே உலகில் இன்று மிகவும் குழம்பிப் போயுள்ளான்.

சிற்றறிவுடைய மிருகங்கள் விடும் கண்ணீரைவிடப் பேரறிவுடையவர் எனக் கூறும் மனிதகுலமே உலகின் பல பாகங்களிலும் அதிகம் கண்ணீர் விடுகிறது. கண்ணீர் விடுவது ஆனந்தத்தில் அல்ல அவலத்தில். எனவே கண்ணீரை நிறுத்தும் கருணையுள்ள மனிதகுலம் தோன்ற வேண்டும் என்பது உலகம் முழுவதும் வாழும் ஆன்மீகச் சிந்தனையாளரின் புத்தாண்டுப் பேரவா. ''கடலுக்குக் கூட எல்லைவைத்த கடவுள் எம் கண்ணீருக்கு எல்லை வைக்க மாட்டாரா?'' என இறைவனைவேண்டும் இரக்கமுள்ள சமுதாயம் இவ்வுலகில் என்றும் உண்டு.

### அன்பெனும் அறம்

மனிதா, கடிகாரம் ஓடுமுன் காலம் ஓடுகிறது. உலகின் நன்மைக்காக ஒவ்வொருவரும் வாழ முற்படாதவரை நாள் அகன்று கொண்டே போகும்.

எனவேதான் மானிடரே, இருபதாம் நூற்றாண்டின் நிறைவில் நிற்கும் வேளையில் ஈர நெஞ்சுடைய இனிய உலகம் பிறக்க பிரார்த்தியுங்கள். அவரவர் சுதந்திரமாய் வாழ அன்பெனும் அறம் பேண முனையுங்கள். மதங்கள் மனிதனை நெறிப்படுத்த முனைய வேண்டும். பசித்தவன் பரிதவிப்பவனை ஆற்றுப்படுத்துவது ஆறுதல் செய்வது மனித ஆத்மீகம். பசித்தவனை பரிதவிப்பவனைப் பார்த்து உன்னை ஆறுதல் படுத்துவேன் உன் பெயரை மாற்று, வணங்கும் முறையை மாற்று என்று கேட்பதும் அறிவுடைய ஆன்மீகமல்ல.

அல்லற்பட்டு அழும் மனிதன் ஆண்டவனை நோக்கி அருள் வேண்டி வரும் வேளை அவனை நிதானப் படுத்த வேண்டிய ஆன்மீகம் தானம் எதிர்பார்ப்பதும் அறிவுடைய ஆன்மீகமல்ல. எனவேதான் உலகம் அமைதிபெற உண்மை ஆன்மீகம் பேணும் மானிடம் பிறக்க வேண்டும்.

அறியாமை அகற்றும் பணியே சமுதாய விடிவு என ஆன்றோர்கள் கற்றவரின் கடமையை வகுத்தார்கள். கற்றவரைக் கடவுள் எனப் போற்றினார்கள். கற்றவரே கடவுள் நிலையில் மீளா அடியவரை மீட்டு எடுத்தோமா என சிந்திக்க வேண்டும். பெற்றோரே, உற்றோரே, உலகத்தவரே, நண்பரே எம் பாத்திரங்களை முறைப்படி அரங்கேற்றுகிறோமா என அகலச் சிந்தியுங்கள். ஆண்டுகள் கடக்கின்றன. ஆயுள் எல்லைகள் குறைகின்றன. எனவே அன்புடைய மானிடமே இப்புவியில் இனிதே வாழ இந்த நூற்றாண்டின் இறுதி அத்தியாயம் இன்று தொடங்குகின்றது.

இன்று பிறக்கும் புத்தாண்டில் இருந்து நாம் ஒவ்வொருவரும் நல்ல மனிதர்களாக, அன்பைப்பேணும் அற ஒழுக்கத்தவர்களாக வாழ முற்படுவோம். உலகம் முழுவதும் வாழும் ஒவ்வொரு மதத்தவரும் ஒவ்வொரு இனத்தவரும் மானிடம் என்ற மாண்பைப் பேண எல்லோரும் இந்நாளில் பிரார்த்திப்போமாக.

மானிடமே! ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும் உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்.

— பாரதியார்

### ஆறு திருமுருகன்

ஆறுதலை சந்திக்க இயலுமா மனிதா? உனது சுகநலத்துக்காய் உலகம் முழுவதும் உயர் பீடங்கள் அமைத்தாய். சுத்தம் பேண, உணவுபேண, உடைமை பேண, மரம் பேண, மகளிர் பேண, குழந்தை பேண, முதியோர் பேண என நாள் குறித்து நலம் பெறும் நாள்கள் அமைத்தாய், நன்மை தான் பெற்றாயா; நன்மை தான் செய்தாயா? இன்று உலகில் அங்கங்கள் பேணவும் நாள் குறிக்க வேண்டிய அவலத்தில் தான் அறிவுடைய மானிடம் வாழ்கிறது. அன்பெனும் அறம் பேணமுடியாத உலகம் உள்ளவரை பேணுவதற்கு பெரு


மலரும் புத்தாண்டில் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் புதுப் பொலிவு பெற்று சுகவாழ்வு வாழ எங்கள் நல்வாழ்த்துக்கள்.

நாளுக்கு நாள் அறிமுகமாகிவரும் புடைவை நாகரிகத்தினை உடனுக்குடன் யாழ்ப்பாணத்திலும் அறிமுகமாக்கி, ஏகோபித்த வாடிக்கையாளர்களை தன்னகத்தே கொண்டவர்கள்.

**மகாநதி**

**புடைவையகம்**

( முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம் )

16, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
T. P. NO: 2552

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

பிளவுஸ் துணிகளுக்கான பிரத்தியேக காட்சியறைகள்.

16, நவீன சந்தை,
( மேல்மாடி )
யாழ்ப்பாணம்.

1, நவீனசந்தை
( மேல்மாடி )
சாவகச்சேரி.

( சி/5932)



**ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோவின்**

**புதுவருட நல் வாழ்த்துக்கள்!**

அன்பர்கள்
வாடிக்கையாளர்கள்
ஆதரவாளர்கள் மற்றும் அனைவருக்கும்

எமது உளங்கனிந்த புத்தாண்டு நல் வாழ்த்துக்களை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ**

இல. 13, 14 பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(61777)



வசந்தம் பிறக்க வந்திடு புதிய ஆண்டே,
வாழ்வு திறக்கத் தந்திடு ஒளியை இங்கே!
பட்டுச் சேலைகளின் சோலை
இன்றைய நாகரிக புடைவைகளின் சோலை

**ராகம்ஸ் பட்டுச் சோலை**

24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

கிளை: பிரதான வீதி,
சங்கானை.
(பஸ் நிலையம் அருகில்)

(சி-5935)



**வாழ்த்தி வரவேற்கின்றோம்**

யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர்

**பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர்**

அவர்கள்

மேலதிக உதவிப் பதிவாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றமையை வரவேற்று, அவரின் சேவை என்றும் நிலைத்து நிற்கவும், வளமுடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

திரு. சி, குமரவேல்,
விவாகப் பதிவாளர்,
வலிகாமம் வடக்குப் பிரிவு

(61815)



அனைவரினதும் துன்பங்கள் விட்டகன்று இன்பங்கள் நிறைந்த ஆண்டாகப் புத்தாண்டு அமைய

**எமது வாழ்த்துக்கள்**

**ராசி சில்க்ஸ்**

70, 71A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

**நல்லி சில்க்ஸ்**

( விசாலமான காட்சிக் கூடம் )
121 / 1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

● இவை இரண்டும் தவிர்ந்த வேறு கிளைகள் கிடையாது

(சி-5948)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கென குறிக்கோள் வகுத்து

# மனிதர்களாக வாழப் பழகுங்கள்!

இன்று புதுவருடப்பிறப்பு. இன்றைய நன்னாள் மக்களின் விடிவுக்கு ஒளி காட்டுவதாக அமைய வேண்டும் என்பதே நம் எல்லோருடைய அவாவு மாகும். நாம் இந்தப் புது வருடப்பிறப்பன்று பழையன வற்றை மறந்து பட்ட துன் பங்களை, துயரங்களை, இடர் களை எல்லாம் நீக்கியருள வேண்டுமென்று இறை வனைப் பிரார்த்திக்க வேண் டும்.

இன்று பிறக்கும் புத் தாண்டு முதலாக நாம் ஒவ் வொருவரும் ஒவ்வொரு குறிக்கோளை நோக்காகக் கொண்டு வாழ்வதற்குச் சங் கற்பம் எடுத்துக் கொள்வதே நல்லது.

''குறிக்கோள் இல்லாது கெட்டேனே'' என்று திரு நாவுக்கரசு சுவாமிகள் கூறி யருளியதை ஈண்டு நோக்கு தல் சாலச் சிறந்தது. ஆகவே மானிடராகப் பிறவி எடுத்த நாம் வாழ்க்கையில் குறிக் கோளுடன் வாழப் பழகுதல் வேண்டும்.

குறிப்பாக மாணவர்கள் தமது 'கல்வியே கருந்தனம்' என்பதையும் மக்கள் 'நேர் மையே நிறைந்த செல்வம்' என்பதையும் வர்த்தகர்கள் 'உண்மையே உயர்த்தும் ஏணி' என்பதையும் நோக் காகக் கொண்டு செயற்படு தலே நன்மை பயக்கும்; சமூ கத்தை மேம்படுத்தும்.

'எப்பவோ முடிந்த காரி யம்' என்ற யோகர் சுவாமி கள் கூற்றுப்படி நியதி என்று ஒன்று இருக்கிறதே! அதை மிஞ்சி நாம் என்ன செய்யமுடி யும்? என்று ஒரு சிலர், இரா மன் ஆண்டாலென்ன, இரா வணன் ஆண்டாலென்ன என்று வெறுமனே வாளா

**இராசையா ஸ்ரீதரன்**

விருப்பதைக் காணக்கூடிய தாய் இருக்கின்றது. அந்த நிலை மாறவேண்டும்.

நாம் மது மண்ணிலே சுபீட்சமாகவும் சுதந்திரமாக வும் வாழ்வதற்கு என்னென்ன தேவையோ, என்னென்ன அவசியமோ அவற்றை நாம் அடைவதற்குரிய நல்ல வழி களையே பின்பற்ற வேண் டும். அதில் உண்மையும் நேர்மையும் ஒழுக்கமும் நிச் சயம் கலந்திருக்க வேண்டும். சுயநலம்சிறிதும் தலைதூக்கக் கூடாது.

மற்றவர்கள் நம்மைப் பார்த்து வியக்கும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் சிரிக்கும்படியாக நடக்கக் கூடாது.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக.''

என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கு. நாம் கற்றால் மாத்திரம் போதாது கற்ற வண்ணம் ஒழுகுதலே மிகவும் முக்கியமானதாகும்.

எமது முன்னோர், இப் படித்தான் வாழ்தல் வேண் டும் என்று சில வரன் முறை களை வகுத்துச் சென்றிருக் கின்றார்கள். அவற்றைக் கைக்கொள்ளாமல் விட்டு விட்டு நாம் ''எப்படியும் வாழலாம்'' என்ற நிலையைப் பின்பற்றுவது நீங்க வேண் டும்.

மனிதன் முதலில் மனித னாக வாழப் பழகுதல் வேண் டும். மனிதனை மனிதனாக மதிக்கப் பழகுதல் வேண்டும். மற்றவர் மனம் புண்படும் படியாகப் பேசுவதை முதலில் தவிர்க்க வேண்டும். எமது தேவைகளைத் தியாகம் செய்து மற்றவர்களுக்காக வும் விட்டுக் கொடுத்து வாழ்ந்து, விட்டுக் கொடுக் கும் மனப்பான்மையை நம் மிடையே வேரூன்றச் செய் தல் வேண்டும். எவ்வளவு தான் வருமானம் வருவதாக இருந்தாலும் அந்தக் காரி யத்தால் மற்றவர்களுக்கு இடைஞ்சலோ, தீமையோ வருமாயின் அதை அறவே விலக்கிவிட வேண்டும்.

இந்தப் புதுவருடம் முத லாக நமது தேவைகளைக் கவனிப்பதோடு மற்றவர் களுக்காகவும் வாழ்ந்து [illegible] அனை வரும் முன்வருதல் வேண்டும்.

''புத்தாண்டே வருக'' என்று இரு கரங்கூப்பி வர வேற்று இன்று முதலாக நாம் புது வாழ்வு வாழ அந்த எல்லாம் வல்ல பரம் பொருளை மனதில் வழுத்தி வாழப் பழகுவோமாக. ★


எமது அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நத்தார், புதுவருட
**வாழ்த்துக்கள்!**

மலரும் புத்தாண்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி வாழ்த்துகின்றோம்.

உங்கள் நகைத் தெரிவுகளுக்கு
நீங்கள் என்றும் நாட வேண்டிய இடம்:

**நியூ லலிதா ஜுவலர்ஸ்**
170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
( ராஜா தியேட்டர் முன்பாக )

கிளை;
165, செட்டியார் தெரு, கொழும்பு - 11. போன்; 01-332948
1604, ஜெறா ஸ்ரீட், ரொறன்ரோ, கனடா. போன்; 416-4612610
(61783)



**பொலிகண்டி**
**பாரதி விளையாட்டுக்கழக**
**மைதான திறப்பு விழா**

காலம்: நாளை ( 02 - 01 - 1999 )
சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணி

தலைமை: திரு. த. கங்காபதி
(நிலையத் தலைவர், பாரதி ச. ச. நிலையம்)

பிரதம விருந்தினர்
உயர் திரு. து. வைத்திலிங்கம் அவர்கள்
( மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம் )

சிறப்பு விருந்தினர்கள்
திரு ஆ. சிவசுவாமி அவர்கள்
( பிரதேச செயலர், பருத்தித்துறை )
திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்கள்
( பிரதேச செயலர், கரவெட்டி )
திரு. K. W. விமலராஜன் அவர்கள்
( யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி )

கௌரவ விருந்தினர்கள்
திரு. நா. மகேந்திரன் அவர்கள்
( உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம் பருத்தித்துறை )
திரு. ச. செவ்வந்திநாதன்
(ஓய்வுபெற்ற செயலாளர், பிரதேசசபை, பருத்தித்துறை )

**பிரதமவிருந்தினர் அவர்கள்**
**மைதானத்தைத் திறந்து வைப்பார்கள்**

இந்த மைதானம் பொலிகண்டி பாரதி சனசமூக நிலையத்தின் 'சுவிஸ் கிளை' அங்கத்தவர்கள் அன்பளிப்புச் செய்த ரூபா இருபது இலட்சம் நிதி யுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது என்பது நன்றி யுணர்வுடன் குறிப்பிடத்தக்கது.

★ வடமராட்சியில் உதைபந்தாட்டத்தில் முன்னணி யில் திகழும் கழகங்களுக்கிடையேயான காட்சிப் போட்டிகளும் இடம்பெறும்.
★ எமது விழா நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

நன்றி
பொலிகண்டி பாரதி ச. ச. நிலையத்தினர்.
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.


## புலர்கின்ற புத்தாண்டில்...

துன்பம் நீங்கியே இன்பம் சேரட்டும்
சூழும் தீமைகள் யாவும் மாழட்டும்
கண் கலங்கிடும் கதைகள் போகட்டும்
காட்சி யாவிலும் கனிவு ஊறட்டும்
அன்பு கொண்டவர் அரணு மாகட்டும்
ஆறு போலொரு அழகு சேரட்டும்
என்பு டைத்திடும் நோய்கள் தீரட்டும்
ஏழுல கிலும் போர்கள் ஓயட்டும்!

அழிவு முறைகளு மழிந்து போகட்டும்
அறிவு வந்துமன மமைதி யாகட்டும்
கழிவு குப்பைகள் கானில் ஓடட்டும்
கடமை கண்ணியம் கருத்தில் சேரட்டும்
மொழிப் பிரச்சினை முடிந்து போகட்டும்
மோத லிற்கொரு முடிவு சேரட்டும்
ஒழிவு மறைவுகள் ஒழிந்து போகட்டும்
ஒழுக்க மானவர் உலகை ஆளட்டும்!

காலம் வந்தொரு பதிலைச் சொல்லட்டும்
காணும் வாழ்விலெம் கதைகள் வெல்லட்டும்
ஞாலம் வேண்டிடும் ஞானம் கூடட்டும்
நன்மை பெற்றவர் நன்றி பாடட்டும்
வீழ்ந்த பெருமைகள் விரைந்து ஓங்கட்டும்
விதைகள் முளைத்தொரு விருட்ச மாகட்டும்
பாழடைந்த பழைய நிலைமைகள் ஓடட்டும்
பாரினில் புதுமைகள் புதியதாய்ப் பொங்கட்டும்!

— கி. குருபரன்

## புத்தாண்டே வருக!

புத்தாண்டே வருக வருக — வாழ்த்திப்
போற்றி வரவேற்கிறோம் வருக
சித்தம் மகிழ்ந்திடவே வருக — ஞானச்
செல்வம் பெருகிடவே வருக

பசிப்பிணிக் கனலிடைப் புழுவாய் — நெஞ்சம்
பதைப்பவர் துயர் தீர்க்க வருக
வசிப்பிடம் அற்றவர் வதியக் — குடிசை
வனைந்திடும் துணைவனாய் வருக

நீதியின் சோதியாய் வருக — தூய
நெறிகளின் தூதனாய் வருக
வேதனைக் கடலிடை அலையும் — மக்கள்
விடுதலைக் கரையேற வருக

பொன்னுலகின் கருவாகி வருக — சாந்திப்
புதையலின் உருவாகி வருக —
மன்னுலக புதுவாழ்வில் மகிழ — தங்க
மாணிக்கச் சுடராக வருக.

— யாழ். ஜெயம்

## விடிவு தர வேண்டுவமே!

மீண்டுமோர் புத்தாண்டு மெள்ளெனப் புலர்ந்ததின்று
நீண்டு தொடரும் யுத்த பூமி அரங்கதனில்
ஆண்டு பல்லாண்டு அடிமைகளாய் நாம் துவண்டு
பூண்ட புனித வேள்வியது பூபாள இசைபாட
மாண்டு போன மனித மாண்பு மாநிலத்தில் கருவாகி
கொண்டு வரும் சுதந்திரத்தென்றல் இதயத்தின்
இருப்பாக
ஈண்டு எழும் புத்தாண்டு விரைவாக விடிவைத்தர
வேண்டுவமே வாழ்வளிக்கும் வல்லோனை!

—கொழும்புத்துறை
எஸ். யேசுதாஸ்


வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
லைடனின் புதுவருட வாழ்த்துக்கள்.

**பொங்கல் மலிவு விற்பனை**

வாடிக்கையாளர்கள் நன்மை கருதி லைடனின்
மலிவு விற்பனை தைப்பொங்கல் வரை
நீடிக்கப்பட்டுள்ளது.

**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
T. P. No - 2381
(சி/5944)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாமல் இணைந்து திரளும் இளைய சமுதாயம் ஓங்குக!

புதிய வருடம் ஒன்று இன்று மலர்கிறது.

இருள் அகன்று ஒளி பிறப்பது போல எமது வாழ்வில் துன்பங்கள் நீங்கி இன்பகரமான வாழ்க்கை ஒன்று இன்று முதல் ஆரம்பமாக வேண்டும் என்ற புதிய சிந்தனையுடன் இந்த வருடத்தை நாம் வரவேற்போம்.

கடந்த வருடம் எமது வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு நிகழ்வுகளில் நல்லனவற்றை மனப்பூர்வமாக ஏற்று இந்த வருடத்தில் அவற்றையே அடித்தளமாகக் கொண்டு செயற்படுவோம்.

இந்த வருடம் நாம் ஆரம்பிக்கும் புதிய வாழ்வு எமது மனத்தில் புதிய எண்ணங்களை ஏற்படுத்துவதாகவும் ஏனையவர்களுக்கு முன்மாதிரியானதாகவும் அமைதல் வேண்டும்.

எமது மனங்களிலே புதிய சிந்தனைகள் பிறக்க வேண்டுமாயின் நாம் ஒவ்வொருவரும் ஒன்றுபட்டு உண்மைக்காக உழைக்க வேண்டும். அன்பினால் இந்த உலகத்தை ஆள வேண்டும்.

இத்தகைய சிந்தனைகள் எமது மனத்திலே உருவாகும் போது, இந்த உலகத்தை எமது பக்கம் ஈர்க்கக்கூடிய வாய்ப்பும் உண்டாகும்.

இயற்கை நியதிப்படி இந்த உலகத்திலே கணத்திற்குக் கணம் பல்வேறு மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எமது வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் எத்தகைய மாற்றம் ஏற்படுகின்றது என்பது குறித்து நாம் ஒவ்வொருவரும் நன்றாகச் சிந்தித்தல் வேண்டும்.

இந்தச் சிந்தனையானது முழு மனிதசமுதாயத்திற்கும் பயன்பாடுடையதாக அமையுமாயின் அது வரவேற்கத் தக்கதாக அமையும்.

தனி ஒரு மனிதனது சிந்தனைகள் உலகத்தின் சிந்தனைகளையே மாற்றி அமைத்த வரலாற்றை நாம் காண்கின்றோம். எனவே எம் ஒவ்வொருவரது சிந்தனையும் தூய்மையானதாகவும் பிறருக்குப் பயன்பாடுடையதாகவும் அமையுமாயின் அதுவே வரவேற்கப்படவேண்டியது.

**இ. நி. ஆனந்தன்**

ஈழத்தமிழர்களாகிய நாங்கள் எமது வாழ்க்கையில் இதுவரை காலமும் அனுபவித்த சோதனைகள், வேதனைகள் யாவும் நீங்க வேண்டும் என்ற புதிய சிந்தனையுடன் இந்தப் புதிய வருடத்தை வரவேற்போம்.

இடம்பெயர்வுகள், போர்க் கொடுமைகள் மலிந்த இந்த மண்ணில் பிறந்த எமது உறவுகள் இன்று உலகம் முழுவதும் அகதிகளாகி அல்லற்படுகின்ற நிலையைக் காண்கின்றோம்.

இந்த நிலைமை நீங்கி எமது வாழ்வில் சமாதானம், சாந்தி, சுபீட்சம் பிறக்க வேண்டுமாயின் எமது எண்ணங்கள் நல்லவையாக இருக்க வேண்டும், நாம் திருந்தவும் வேண்டும்.

கடந்த காலங்களில் நாம் செய்த நல்ல முயற்சிகளையும் அதனால் பெற்ற நல்ல அறுவடைகளையும் இந்த நாளில் நாம் நினைத்துக் கொள்வோம். தெரிந்தோ அல்லது தெரியாமலோ செய்த தவறுகளை எல்லாம் இன்றைய நாளில் நாம் மறந்து கொள்வோம்.

இயல்பாகவே நல்லவர்களாகப் பிறந்த நாம் இன்று எத்தனை எண்ணங்கள் கொண்டு எம்மிடையே பல்வேறு பிரிவினராகப் பிரிந்து நிற்கின்றோம்?. இந்த நிலைமை மாறவேண்டும்.

போட்டி, பொறாமை நீங்கிய புதிய இளைய சமுதாயம் ஒன்று இந்த மண்ணில் தோன்ற வேண்டும். அந்தச் சமுதாயம் எதிர்கால நன்மை கருதியதாகச் செயற்பட வேண்டும்; பிளவுபடாமல் இணைந்து திரளும் இளைய சமுதாயமாகத் தோன்ற வேண்டும். இத்தகைய சமுதாயத்தின் தோற்றத்துக்கு இந்தப் புதிய வருடம் வழி வகுப்பதாக அமையட்டும்.

புதிய வருடம் பிறந்து விட்டது என்ற புதிய உணர்வு எமது மனதிலே உருவாகும் போது இந்த வருடத்தில் நாம் எதனைச் செய்யப் போகின்றோம் என்பதையும் ஒரு கணம் சிந்தித்தல் வேண்டும்.

அன்பு என்னும் சிறந்த இலக்கை எமது வாழ்க்கையின் அடிநாதமாகக்கொண்டு அதனால் ஏனையவர்களை எம்பால் ஈர்த்து அதற்கு அவர்களை அடிமையாகச் செய்தலே இந்த வருடத்தில் [illegible] [illegible] ★

## புத்தாண்டே புதிதாய்வருக!

புத்தாண்டே
நீ புதிதாய் வருக!
புயலுக்குள் அகப்பட்ட ஓடமாய்
காலுக்குள் அகப்பட்ட நத்தையாய்
சகதிக்குள் மாண்ட யானையாய்
இருக்குமெம் வாழ்வில்
இனியாவது.........
புத்தாண்டே நீ புதிதாய் வருக!
ஆதவனுக்கு புது ஆடையணிந்து
ஆகாயத்திரையில் நடமாட ஆணைகொடு
பாதைக்காய் பாதையின்றிப் ப தக்குமெம்
உடன் பிறந்த உதிர உறவுகளுக்கு
உண்ணவும் உயிர்வாழவும் வழிகொடு
பூகம்பம் உருவாகும் பூமிப்பந்தில்
போர் துணிந்த சேதியை புதிதாய் கொண்டுவா!
அழிவுகளும், அகதிவாழ்வும், அனர்த்தங்களும்
ஆரம்பமல்ல முடிவென்று அசையாத ஆவணமிடு
புத்தாண்டே!
தென்றலை சுமந்து தேசத்தை சுகமாக்கு
புத்தாண்டே நீ – புதிதாய் வருக!

– **பளையூரான்**

## அமைதி மலர வேண்டும்!

தொண்ணூற்று...ஒன்பதாகி,
ஆண்டே இன்று மலர்கிறாய்.
கரங்கள் கூப்பி நாம் நிற்பது...
பெரும் வரங்கள் கேட்டே!
ஆம், ஆண்டாண்டாய்ப்படும் பாடுகள்,
என்ன சொற்பமா?
கதியற்ற இந்த மனிதர்களின்
கலக்கங்கள் தீர்த்திட வேண்டும்.
சதிராடுகின்ற சந்தேகங்களை
நிலத்திலிருந்து போக்கிட வேண்டும்.
சுமைகளெல்லாம் இறங்கி
தோள் கொடுக்க வேண்டும்.
ஐயனே! அமைதி மலர,
நீ அருளிட வேண்டும்!

- **மீசாலையூர் கமலா**


தமிழர் தம் வாழ்வில் நிம்மதியைத் தருவாய்

**புலரும் புத்தாண்டே!**

புதுமணப் பெண் புதுப்பொலிவு பெறும்
முகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
விதம் விதமாகப் பெற்றுக்கொள்ள

★★★★ **சீமாட்டி** ★★★★

**புடைவைக் கடல்**

122, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

T. P. No. 2196

(சி/5938)



உ

வல்வை
ஸ்ரீ வாலாம்பிகா சமேத
ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான
(சிவன் கோயில்)

**திருவாதிரை சிறப்பு நிகழ்ச்சி**

2 - 1 - 1999 சனி அதிகாலை வழமைபோல அபிஷேகம் பூசைகள் நடைபெற்று, பகல் 9 மணியளவில் **சங்கீத வித்துவான் க. இராமநாதன்** (ஆசிரியர்) அவர்களின் இன்னிசைக் கச்சேரி சிறந்த பக்கவாத்திய சகிதம் நடைபெறும்.

பகல் 11 மணியளவில் வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து, நடராஜப் பெருமான் திருநடனமாடி வீதியுலா வந்து அருளுவார்கள்.

(61792)

ஆதீன கர்த்தா



**புத்தாண்டு வாழ்த்துகள்!**

வலிகாமம் வலயத்தின்
கல்விப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றிருக்கும்
உயர்திரு

**வீ. இராசையா அவர்கள்**

எல்லா நலன்களும் பெற்று எமது வலயத்தின்
கல்வி வளர்ச்சியில் வியத்தகு சாதனைகளை ஈட்ட
இறைவன் திருவருளை வேண்டி இதயம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர்கள் சங்கம்,
சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்.

(சி/5962)



**மனமார வாழ்த்துகிறோம்**

யாழ். வண்ணார்பண்ணை
கேசாவில் பிள்ளையார் கோயிலடி வாசரும்
யாழ். மாநகர சபை முன்னாள் ஊழியரும்
சிறந்த சமூக சேவையாளருமாகிய

**திரு. தா. சு. லோகநாதன்**

சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு
அவரைப்பாராட்டி அவரது சேவை இன்னமும்தொடர
வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையைப்
பணிந்து வாழ்த்துகின்றோம்.

காலஞ்சென்ற
வே. கனகரெத்தினம்
பத்தர் குடும்பத்தினரும்
உறவினர்களும்.

நாச்சிமார் கோயிலடி.

(61811)



புலரும் புத்தாண்டில்
வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
புத்தொளி வீசட்டும்.

உங்கள் அழகின் எண்ணம்
கோபிகாவின் ஆடைகளின் வண்ணம்!

**கோபிகா ஆடையகம்**

இல. 5/4, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

T. P. NO. 2377

(சி/ 5934)



**பொதுக் கூட்டம்**

சித்த மருத்துவ மாணவ மன்றத்தின் பொதுக் கூட்டம் **04 – 01 – 1999** திங்கட்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு துறை மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
சித்த மருத்துவ மாணவ மன்றம்

யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

(61807)



ROTARACT CLUB

இதோ
ரசிகப் பெருமக்களே!
இன்னிசை மழையில் நனைய
உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

மக்கள் சேவைக் கழகமாகிய

**யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழக**

வளர்ச்சி நிதிக்காக
"கானரஸா" இசைக்குழுவினர் வழங்கும்

**காதல் கீதங்கள்**

இசை நிகழ்ச்சியை கண்டு, கேட்டு ரசிக்கக் கிடைக்கும்
அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்!

★ இடர்ப்பட்ட உள்ளங்கள்
இளைப்பாற ஒரு நேரம்

★ அனைத்துமே இசைப்புயல்
ஏ. ஆர். ரகுமான் செதுக்கியவை

இடம்:- யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை

காலம்:- 1999 தை 2 ஆம் 3 ஆம் திகதிகளில்
பிற்பகல் 1.30 மணிக்கு

அனுமதிச் சீட்டுக்களை மண்டப வாயிலிலும்
பெற்றுக் கொள்ளலாம்.

புத்தாண்டைப் புது வேகத்துடன் தொடங்குங்கள்!

(சி–5952)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வாழ்வில் ஒளியேற்றி மலர்வாய் புதிய ஆண்டே நீ!

★ குளிர்பானங்கள், கேக் வகைகள் தயாரிக்கும் மூலப் பொருள்கள்
★ சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள். ★ கேக் அலங்காரப் பொருள்கள்
★ அச்சகத் தேவைக்கான காகிதாதிகள், மை வகைகள்

அத்தனையும் ஓரிடத்தில் பெற்றுக்கொள்ள அன்றும் இன்றும் என்றென்றும்

பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் & பேப்பர் மேர்ச்சன்ட்

104 (298), ஆஸ்பத்திரி வீதி, (சி-5937) யாழ்ப்பாணம்.

தமிழர் தம் துன்ப துயரங்கள் நீங்கி இன்பங்கள் நிறைந்த ஆண்டாக இப்புத்தாண்டு அமைய

எமது வாழ்த்துக்கள்

தங்க நகையுலகில் மங்காப் புகழ் பெற்ற

சாரஙகா நகைமாடம்

(இணையகம் T. P. No: 2480)

177 | 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அருள்முருகன் நகையகம்
(தலைமையகம்)
96/1, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

சிவா நகைமாடம்
(கிளையகம்)
யாழ். வீதி,
சாவகச்சேரி.

(சி-5949)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், மாணவர்கள் அனைவருக்கும்

சிற்றியின் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

நாளைய நாகரிகத்தினை இன்றே அறிமுகம் செய்து நவீன டிசைன்களில் உங்களின் எண்ணம் போல் தைத்துக் கொடுப்பதில்

யாழ். நகரில் முன்னணியாளர்கள்.

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

(ரவுஸர் தினுசுகளின் ராஜ முத்திரை)

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/ 5936)

# புத்தாண்டுப் பயணத்தில் மகிழ்ச்சி ஒளி பிறக்கட்டும்

புத்தாண்டு பிறந்து விட்டது! புது வாழ்வு உதயமாகுமா? இரத்த ஆறுகளைப் பிறப்பிக்கும் தகராறுகள், யுத்தங்கள் இவற்றிற்கு முடிவு கிட்டுமா? படுகொலைகள். அனர்த்தங்கள், குண்டு வெடிப்புக்கள் போன்ற அவலங்கள் ஒழிக்கப்பட்டு. நாட்டிலே சமாதானம் உருவாகி, 'சமகாலப்பிரச்சினைகளுக்கு' ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? 'பதற்ற நிலை' மாறி மனிதன் மனிதனாக வாழும் நிலை உருவாகுமா?

இன்று மனிதனுடைய நிலை ஒரு 'பரிதாப நிலை'. ஏனென்றால் மனிதப்பிரச்சினைகளை மனிதனே தீர்க்க முடியாத அளவுக்கு மனிதாபிமானமற்ற நிலையில் மனிதன் காணப்படுகின்றான் மனிதன் தன்னுடைய 'ஆன்மீக விழுமியங்களை' சரியானபடி நடைமுறைப்படுத்தாமல் விட்டு விட்டமை இதற்குக் காரணமாகலாம். எனவே ஆன்மீக நிலையை நாம் சீர் தூக்கிப்பார்ப்போம்!

**போதகர்
J.W. ஜோகராஜா
(மெதடிஸ்தஆலயம்அச்செழு)**

இனப்பிரச்சினைகள், வன்முறைகள், கொலைகள், கொலை மிரட்டல்கள், பாலியல் வன்முறைகள், விபச்சாரங்கள், போதைப் பொருள் பிரச்சினை பலவிதப் பொருளாதாரப் போட்டிகள், மோதல்கள், சுரண்டல்கள், மோசடிகள், நேர்மை, நீதி பேசுகின்றவர்கள் ஒருவரைஒருவர் ஏமாற்றி வரும் போக்கு, வலிமை படைத்தவர்களின் கணிப்பீடுகளும், தீர்மானங்களும் உயரிய முடிவுகளாகத் தெரிவு செய்யப்படுதல், யுத்தங்களினாலும் இடப்பெயர்வுகளினாலும், இருப்பிடங்கள் ஏதுமின்றி வாழ வழியின்றித் தவிக்கும் மக்கள் பிரச்சினை, தங்களுக்கு அருமையானவர்களை இழந்து தவிக்கும் மக்கள் பிரச்சினைகள் போன்ற பலதரப்பட்ட பிரச்சினைகளுக்குக் காரணம் ஒவ்வொரு தனிமனிதனும் செய்யும் பாவம்தான். இப்பாவம் ''சமூகப்பாவங்களாகி'' சமுதாயத்தையே நாசமாக்கி விட்டது இதனால் ஏற்பட்ட மனித துயரங்கள் அளவிடப்பட முடியாதவை.

எனவே மனிதன் தன்னைப் பரிசோதனை செய்ய நேரம் வந்தாகிவிட்டது. காலம் பொன்னானது; அது நாம் விரும்பியோ விரும்பாமலோ நகர்ந்து கொண்டே போகின்றது. 1999 ஆம் ஆண்டும் பிறந்து விட்டது! ஆனாலும் மனிதன் காலத்தின் அருமையைப் புரிந்திருந்தும் அதைப் புனிதமான இறைவனின் அருங்கொடை என்று எண்ணாமல் தன் மனம் போனபடி வாழ்ந்து வாழ்வைப் பாழாக்கி விடுகின்றான். வாழ்க்கையின் விழுமியத்தை நிலைநாட்டுவதில் ஒவ்வொரு தனிமனிதனும் பங்காளியாகின்றான். பங்களிப்பைச் சரிவரச் செயலாற்ற சரியானதைச் செய்யவே மனிதனின் இலட்சியமாக வேண்டும்.

'உன் மீது நீ அன்பு கூர்வது போல அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக!

என்கின்ற இயேசு நாதரின் அருள்வாக்கு எமக்குள் செயலாற்ற வேண்டும்; அப்போது தான் ஆன்மீக விழுமியங்கள் உயர்வடையும். புனித ஆவியின் நவ கனிகள் எங்கள் உள்ளத்தில் பிறக்க வேண்டும். அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம். நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பன எங்கள் வாழ்வில்உதயமாகவேண்டும்!

இப் புத்தாண்டிலே, நாம் எடுக்க வேண்டிய பல தீர்மானங்கள் உள்ளன. குறிப்பாக எமது ஆன்மீகப் பயணம் எவ்வாறு உள்ளது? நாம் இறைவனிடம் நெருங்கிச் செல்வது போல எனக்கு அடுத்திருப்பவரான சகோதரனிலும் அன்பு கூர்ந்து அவனை நெருங்கி, அவனுக்கு உதவி செய்து, அவனுக்கு நீதி நேர்மையாக வாழ்ந்து எமது ஆன்மீக விழுமியத்தை நிலைநாட்டுவோம்!

அப்போது தான் இப் புத்தாண்டுப் பயணம் எமக்கு வளமுள்ளதாக அமையும்; கடந்தகால சோகங்களும், இருள்களும் நீங்கி மகிழ்ச்சியின் ஒளி உதயமாகும்!!. ★

நல்லவை நடக்கும் நல்லாண்டாக

இப்புத்தாண்டு அமைய எமது நல்வாழ்த்துக்கள்!

தரம் நாடுவோர் நிரந்தரமாக நாடும் ஐஸ்கிறீம், குளிர்பான, சிற்றுண்டி வகைகளை சுவைபடத் தந்து உபசரிப்போர்

என்றும் இனிக்கும்

லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/ 5956)

பிறக்கும் புத்தாண்டு எல்லோருக்கும் நன்மை தருவதாகுக!

நாட்டில் அமைதியும் சமாதானமும் பிறக்கட்டும்!

KULAM CREAM HOUSE JAFFNA

குலம் கிறீம் ஹவுஸ்

ஸ்பெஷல் ஐஸ்கிறீம், வனிலா ஐஸ்கிறீம், சொக்லட் ஐஸ்கிறீம் மற்றும் இதர சிற்றுண்டி வகைகள் சுவைத்திடவும் -
விஷேட நிகழ்வுகளுக்குத் தேவையான ஐசிங் கேக், சிற்றுண்டி வகைகள் முன் பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும் -
யாழ். நகரில் நன்மதிப்புப் பெற்றவர்கள்.

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/ 5939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒளி தர விரிக!

புதிய ஆண்டு ஒன்று இன்று மலர்ந்துள்ளது.

புதியனவற்றைக் கண்டதும் புத்துணர்வும், அவை குறித்து ஆராயும் ஆவலும் கூடவே பிறந்து விடும். தாமும் புதிதாக, புதுமையாக ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற வேணவாவும் இக்காலத்தில் மனிதனுக்கு உதிப்பது உண்டு.

புதிய வருடம் என்றதும், இந்த ஆண்டில் நாம் எதனைச் செய்யப் போகிறோம், செய்ய வேண்டும் என்று ஒவ்வொருவரும் திட்டமிடுவர். திட்டமிட்டவற்றை இந்த ஆண்டுக்குள் செய்து முடித்துவிடும் மனஉறுதியும் அதற்கான வசதிகளும் அவசியம்.

புதியன பிறந்தால் புதிதாக ஒரு நம்பிக்கையும் மனதில் முகிழ்த்து விடும். கழிந்து போன, கடந்து போன ஆண்டினைவிட, புதிய வருடத்தில் நல்லனவும், நன்மைகளும், சேமங்களும், வசதிகளும் கிடைக்க வேண்டும் என்ற விருப்பமும் — ஆசையும் கூடவே எல்லோர் மனதிலும் பளிச்சிடும்.

பிறக்கும் புதிய ஆண்டு நல்லன தரும்; துன்பங்கள் நீங்கி நிம்மதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே அதனை மக்கள் வரவேற்கிறார்கள்.

ஈழத்தமிழர் வாழ்வைப் பல வகைகளாலும் சூழ்ந்துள்ள இருள் நீங்கி ஒளி பிறக்கும் என்ற நம்பிக்கையுடனேயே மக்கள் பலப்பல புத்தாண்டுகளை வரவேற்றனர்.

நம்பிக்கையே வாழ்க்கையின் பற்றுக்கோடு. பிறக்கும் 1999ஆம் ஆண்டு, தமிழர் வாழ்வின் பேரிருளை நீக்கி ஒளி காட்ட வேண்டுதல் செய்வோம்.

இன்று பிறக்கும் ஆண்டு கரைந்து போகவுள்ள இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுக்கு முந்திய ஆண்டு. காலத் தலைவாசலில் வந்து நுழைய இருக்கும் இருபத்தோராம் நூற்றாண்டு முற்றிலும் புதிய வாழ்க்கை வடிவத்தை உலக மக்களுக்கு காட்டப் போகிறது.

உலக நாடுகளில் வாழும் மக்களை மிக நெருக்கமாகக் கொண்டு வந்து "புவிக் கிராமம்" (Global Village) ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் தொலைத்தொடர்பு, தகவல் துறைகள் வேகமாக வளர்ந்து வருகின்றன.

எனினும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இந்தத் துறையில் பின்னுக்கே நிற்கின்றன. தத்தமது நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை வைத்துக் கையில் பிசையும் நிலை இன்னும் நீங்கியபாடு இல்லை.

இதனால் உலகத்தில் அமைதிக்கும், சமாதானத்துக்கும், சுபீட்சத்துக்கும் பதிலாக குழப்பங்களும், அழிவுகளும், வளர்ச்சி இன்மைகளுமே மலிந்துபோயுள்ளன. ஏவுகணைகள், அணுகுண்டுகள் போன்ற விஞ்ஞான விளைவுகள் மனித வாழ்வை எச்சரித்த வண்ணமே உள்ளன.

"புவிக் கிராமம்" உருவாக்கப்படுவதற்கு முன்னர் நாடுகளில்; அனைத்துலகத்லும் அமைதியும், நட்பும், சமாதானமும், வளர்ச்சியும் காணப்பட வேண்டும். அந்த ஒளியைப் பிரகாசிக்கக் கூடியதாகப் புதிய ஆண்டு விரிவதாக!

## வன்னிமாணவருக்கு உதவ இங்கு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம். ஜன. 1

வன்னிப் பகுதியில் இடம் பெயர்ந்து வாழ்கின்ற பாடசாலை மாணவர்களுக்கு நிதி சேகரிக்கும் பணியில் யாழ். பல்கலைக் கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் மேற்கொண்டுவருகிறது.

இதற்கென மேற்படி ஒன்றியத்தால் விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் அதிர்ஷ்டம் பார்க்க பட உள்ளது.

இந்த நிதி சேகரிப்பின் மூலம் கிடைத்த பணத்தை மனித முன்னேற்ற நடுநிலை இயக்குநர் அருள்திரு ஜெயக்குமார் அடிகள் ஊடாக வன்னிக்கு அனுப்ப ஏற்பாடாகி உள்ளது. இந்த நிதியை அவரிடம் கையளிக்கும் நிகழ்ச்சியும் இன்று அங்கு நடைபெறும். (ஐ)

## வயோதிபர் இல்லத்துக்கு உணவுப் பொருள் உதவி

அரியாலை, ஜன. 1

கொழும்புத்துறை வயோதிபர் இல்லத்திற்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு தொகுதி உணவுப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சங்கத்தின் ஆளணி முகாமையாளர் சு. பாலசண்முகநாதன் இப்பொருள்களை சங்கத்தின் சார்பாக வயோதிபர் இல்லப் பொறுப்பாளரிடம் கடந்த திங்கட்கிழமை கையளித்தார்.

அரிசி, சீனி, மைசூர் பருப்பு, தேயிலை போன்ற பொருள்களே வழங்கப்பட்டன.

கிறிஸ்மஸ் விழாவை ஒட்டி இப்பொருள்கள் வயோதிபர் இல்லத்திற்கு வழங்கப்பட்டதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

## நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

நாவற்குழி, ஜன. 1

கைதடி அரச பொது மருத்துவ நிலையத்துக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது இப் பகுதியில் அதிகரித்து வரும் காய்ச்சல் காரணமாகவே நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (ஐ-102)

## 8 ஆயிரத்து 726 பேருக்கு அஞ்சல் அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஜன. 1

தபால் திணைக்களத்தின் வடபிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகம் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த 8 ஆயிரத்து 726 பேருக்கு கடந்த வருடம் (1998) அஞ்சல் அடையாள அட்டைகளை விநியோகம் செய்துள்ளது.

பெரும்பாலும் ஜி. சீ. ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே இவ்வாறு அஞ்சல் அடையாள அட்டைகளைப் பெற்றுளனர்.

இதேவேளை—

கடந்த வருடம் 7 ஆயிரத்து 112 பேரும், அதற்கு முன்னைய வருடம் (1996) 9 ஆயிரத்து 545 பேரும் இவ்வாறு அஞ்சல் அடையாள அட்டைகளைப் பெற்றுள்ளனர்.

மாணவர்கள் மட்டுமல்லாது அனைவரும் இந்த அஞ்சல் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும்—

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் அஞ்சல் அடையாள அட்டையானது 5 வருடங்கள் மட்டுமே செல்லுபடியானது எனவும்—

அதன் பின்னர் அதனைப் புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும் எனவும்—

குறிப்பிட்ட அடையாள அட்டைகளை பெறவிரும்புவோர் தத்தமது பிரிவுக்கான உபதபாலகங்கள் மற்றும் தபாலகங்கள் மூலம் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## ஆசிரியையின் சடலம் கரை ஒதுங்கியது

செம்பியன்பற்று, ஜன. 1

வடமராட்சி வத்திராயன் கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை பெண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது.

கடந்த 27 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் காணாமற் போன பாடசாலை ஆசிரியையான திருமதி நின்மதிராசா வசந்தகுமாரி (வயது 35) என்பவரின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் காணாமற் போவதற்கு முன் கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5-36)

## ஐந்தொழில்களில் அருளலை குறிக்கும் ஆருத்திரா தரிசனம்

சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருமணி

சர்வ வியாபியாகி எங்கும் நிறைந்து காணப்படும் இறைவனின் ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்துவது நடராஜ வடிவமாகும். பிரபஞ்ச இயக்கத்துக்கு காரணமாகிய திருநடனம் இதில் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஐந்தொழில்களை உணர்த்தும் வகையில் ஆனந்தத் தாண்டவமாடும் நடராஜ மூர்த்திக்கு ஆண்டுதோறும் ஐந்து விழாக்கள் எடுக்கப்படுகின்றன. இவற்றுள் மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரம் அருளலைக் குறிக்கும் சிறப்பு மிக்க விழாவாகும்.

மார்கழித் திருவாதிரை நட்சத்திரத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு பல சிவாலயங்களில்மஹோற்சவம் நடத்தப்பட்டு வருகின்றது. சிதம்பரத்திலே திருவாதிரையில் நடராஜரைத் தரிசிக்கும் வழிபாட்டை "ஆருத்திரா தரிசனம்" என்று சிறப்பாக வழங்குவர். திருவாதிரையில் இறைவனைத் தரிசிப்பது என்பது இதன் பொருளாகும். இத்தகைய சிறப்புமிக்க மார்கழித் திருவாதிரை இவ்வருடம் நாளை சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சிவனின் திருவிளையாடல் பற்றிக் கூறவந்ததிரு மூலர் தனது திருமந்திரத்தில்—

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி<br>
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்<br>
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்<br>
தங்குஞ் சிவனருட் டன் விளை யாட்டதே

என்று குறிப்பிடுகின்றார்.

இப் பாடலின் பொருள்— சிவபெருமானுக்குத்திருமேனி சிவசத்தியேயாகும். அச்சிவனின் அருளாற்றல் எங்கும் பாலி நெய்போல் நீக்கமற நிறைந்துள்ளது. அச்சிவபெருமான் தான் செய்யும் திருவருள் தொழில்களனைத்தையும் சிவசத்தியின் வாயிலாகவே செய்தருளுகின்றான். அச் சிவபெருமானும், திருவருளும் நுண்ணறிவு அம்பலமாம் திருச்சிற்றம்பலத்தின் கண் விளங்கியருள்கின்றன; அதனால் எங்கும் சிதம்பரம் என்றனர். இறைவன் செய்தருளும் திருக்கூத்தும் எங்கும் நிறைந்ததே. எங்கும் சிவமாகவே இருத்தலால் எல்லாவுயிர்களும், எல்லாவுலகங்களும், எல்லா உலகியற் பொருள்களும் சிவநிறைவில் சார்ந்து நிற்கின்றன. அதனால் அனைத்தும் சிவவண்ணமேயாம். அவ்வாற்றால் எங்கும் தங்கும் சிவனருள் திருவிளையாட்டேஎல்லாமாகும்.

### ஞானச் சுடர்

ஆன மறையாதி யாமுரு நந்திவந்து<br>
தேனை யருள்செய் தெரிருனாவத்தையில்<br>
ஆன வகையை விடுமடைத் தாய்விட<br>
ஆன மலாதீதம் அப்பரந் தானே.

எல்லாமான மறை செந்தமிழ்த் திருவைந்தெழுத்தேயாம். அவை இருவகைப்படும், ஒன்று நமசிவாய, மற்றொன்று சிவாயநம இவ்வெழுத்துக்களால் தோன்றும் சிவபெருமானின் திருத்தோற்றம் முதல் திருவுருவத்தோற்றமாகும். அதுவே ஆதியாம் திருவுரு. அதுவே ஐந்தொழில் திருவுரு. அது தூக்கிய கால், மணி வயிறு, ம்தாள், முகம், முடி ஐந்தும் முறையே நமசிவாய என்பர். துடிவலக்கை வீசிடக்கை, மகிழ்வலக்கை, மழுவிடக்கை மறைவலக்கால் ஐந்தும் முறையே சிவாயநம என்பர். இத்திருக்கோலத்துடன் சிவபெருமான் எழுந்தருளி வந்து தன் திருவடித்தேனை அருள் செய்வன்.

இந்நிலையில் ஆருயிர்கள் உடல் கலன் முதலிய கருவிகளை முறையாக விட்டகலும். அகலவே ஆங்கு அருளால் தோன்றுவது ஆணவ மலாதீதம் எனும் பிணிப்பிலா அப்பால் மன நிலையானது கைகூடும். அதுவே அம்முழு முதற் சிவபெருமானார் தன்மையை அளித்தருள்வதாகும். இறைவன் தேனாகவும், சிவப்பெருமாட்டி பாலமிழ்தாகவும் எம்பால் உறைவர். தேன் அறிவாகவும், பால் ஆற்றலாகவும், உறைவு அன்பாகவும் கொள்க; 'நானேயோ தவஞ் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்; தேனாயின்னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்' என்னும் செந்தமிழ் மறை முடிபின் கண் தேன் அமிழ்து தித்தித்தல் மூன்றும் ஓதப் பெற்றுள்ளன. இம் மூன்றும் முறையே அறிவு, ஆற்றல், அன்பு என்னும் மூன்றுமாகும். திருவைந்தெழுத்தே சிவபெருமானுக்குரிய சிறந்த முதல் திருவுரு ஆகும்.

ஆதிபரனாகிய சிவபெருமான் ஆடுதலாகிய திருவுள்ளக் குறிப்பு நேர்பட அவன் திரு அங்கையின்கண் விளங்கும் கனலாடிற்று. அனைத்திற்கும் அருட்புகலிடமாக நிலவும் திருச்சடையும் ஆடிற்று. அச்சடை எல்லோராலும் போற்றிப்புகழப்படுவதென்று அத்திருச்சடையின்கண் காணப்படும் உன்மத்தம் ஆகிய ஊமத்த மலரும் ஆடிற்று. திருச்சடையில் திகழும் ஆருயிராகிய பாதிமதியும் ஆடிற்று. நில அண்டங்களும் ஆடின. அருஞ்சைவர் கொள்ளும் முப்பத்தாறும் மெய்யாகிய நாதத்தின்கண் திருவருளாற்றலுடன் சிறந்தாடினன். இதுவே நாதாந்த நட்டம் எனப்படுகிறது.

இதனை பின்வரும் பாடல் விளக்குகிறது.

ஆதிபரன் ஆட அங்கைக் கனலாட<br>
ஓதுஞ்சடையாட உன்மத்த முற்றாட<br>
பாதிமதியாடப் பாரண்ட மீதாட<br>
நாதமோடாடினான் நாதாந்த நட்டமே.

திருவடிசேர்ந் தின்புறுதற்குச் சிறந்த வாயில் பத்தியொன்றேயாம். மெய்ம்மையாம் உழவைச் செய்து அப்பத்தியினை விதைத்தல் வேண்டும். அன்பு நீரால் பயிராகி வளரும். நாணமென்று சொல்லப்படும் களையினைச் சித்தியினைப் பயக்கும் வைராக்கியமாகிய பற்றுதியினால் அறுத்தல் வேண்டும். களைகட்டவே சிவானந்தத்துச் செலுத்தும் செயலறலாகிய சமாதிக்காவல் காத்தல் வேண்டும். காக்கவே சிவபோகம் விளையும் விளையவே சிவனடி நீங்கா நினைவாகிய அப்போகத்தை அருளால் உண்டிடுதல் வேண்டும். உண்ணவே கைகூடித் திகழும். திருவடிப்பேறு பேரின்ப விளைவாய்ப் பேறாகி நிலைக்கும்.

"குனித்தபுருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்<br>
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்<br>
இனித்த முடைய வெடுத்த பொற்பாதமுங் காணப் பெற்றால்<br>
மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே"

என்ற அப்பர் பெருமானின் தேவார அடிகளின்படி மனிதனாகப் பிறந்த இராமனை, வரும் சிவனின் நடராஜ வடிவத்தை திருவாதிரை நன்னாளிலே தரிசித்து இன்புறுவோமாக.

### நாளை

மார்கழி 18

சனிக்கிழமை

திதி: பூரணை

முற்பகல்: 09.31 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

பிற்பகல் 2. 05 வரை.

சுபநேரம்: 3.30-5.00

இராகுகாலம்: 09.30-11.00

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பிறருக்குத் துன்பம் தருவதை விட பிறர் தரும் துன்பத்தால் துன்பப்படுவது மேல்.

—சாமுவேல் சான்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் வருட நினைவஞ்சலி



மண்ணுலகில்
**27 – 01 – 1926**

விண்ணுலகில்
**11 – 01 – 1998**

### திருமதி செல்லப்பா பவளம்

எங்கள் உள்ளங்களில் என்றும் நிலைத்து
நிற்கும் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

சு. இராமநாதன்,
''விஜயவாசா'',
கைதடி மேற்கு,
கைதடி.

(61759)

## ஓராண்டு நினைவில்



அமரர்
### பொன்னையா நாகராஜா

தோற்றம் **13–05–1934**
மறைவு **01–01–1998**

தொண்ணூற்றெட்டின் வருகையில்
தொலைந்துவிட்ட நம்குலவிளக்கே!
தொண்ணூற்றொன்பதின் தொடக்கத்திலும்
தொலைந்திடாதுஉம் நினைவு!
விண்ணுலகம் சென்று நீர்
வருடம் ஒன்று ஆனதையா
கண்ணை இமைபோல் நம்மை
காத்தநும் ஆத்மா பேறடைய
மன்றாடி வேண்டுகிறோம் மகேசனை.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

— **குடும்பத்தினர்.**

சங்கம் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(61773)

## புதிய கட்டடம் தண்ணீர் தாங்கி பூர்த்தி

தென்மராட்சி, ஜன. 1

மிருசுவில் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கான புதிய கட்டடம், தண்ணீர்த் தாங்கி ஆகியவற்றை அமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

கட்டடம் ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் இவற்றுக்காக ஒன்பது இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரால் கட்டட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன.

(இ-117)

## மாதாந்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 1

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு கொக்குவில் உப அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

'வட பிரதேசத்தின் கால நிலை நிலைமை' என்ற தலைப்பில் க. இராசேந்திரம் உரையாற்றுவார். (ஐ)

## இடர்கால கொடுப்பனவு

நெல்லியடி, ஜன. 1

மந்திகை மருத்துவ மனையில் பணி புரியும் ஊழியர்களுக்கு ஏழு மாதங்களுக்கு உரிய இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

97 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் 98 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான ஏழு மாத கால இடர்காலக் கொடுப்பனவே வழங்கப்படுகிறது.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் ஊழியர்களது விடுமுறைக் காலப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு 15 மாதங்களுக்குரிய இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படுமென முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் நிதிப்பற்றாக்குறையினாலே தற்பொழுது ஏழு மாதங்களுக்குரியஇடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-109)

## சிங்கப்பூர் ஒய்வூதியம்

நீவாலி, ஜன. 1

யாழ். மாவட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெற்றுவருபவர்களின் டிசெம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தத்தமது வங்கிகளுக்குச் சென்று பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

உ
ஐயப்பன் துணை

**அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்**
**அனைவருக்கும் எமது இதயங்கனிந்த**
**புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்**
**பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.**

பவுண்மணி உட்பட அனைத்து நகைகளையும்
நவீன டிசைன்களில் வெட்டிப்பெற்றுக்கொள்வதற்கு
இன்றும் என்றும் நாடுங்கள்:

### சுவிஸ்ஸோ கோல்ட் கட்டிங் சென்ரர்

44/01, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சிறாம்பியடி)

(61663)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவச அழைப்பும்



திருமதி
### செல்லையா மகாலெட்சுமி

(புங்குடுதீவு— 8)

மலர்வு **1948 – 03 – 13**
உதிர்வு **1998 – 01 – 11**

திதி: **1 – 1 – 1999**

இழப்புகள் னம் தாங்கி
எம் நல் வாழ்வினை எண்ணி
பல எண்ணங்கள் கொண்ட
தாயே! உந்தன் ஆன்மா
நாம் கண் காண முடியாத உலகிற்கு
விரைந்துதான் சென்றதேனோ?
உன் விதைகள் இங்கு மரமா
விருட்சமாகி வருகையிலே
அருவமாகி மறைந்ததேனோ?
அவங்கள் நாம் செய்தோமோ?
தவங்கள் செய்ய மறந்தோமோ?
உன் பிரிவால் ஊமைகளாக
அவனடி தொழுகின்றோம் நாளும்
நாம் உமக்காய் தாயே!
நீ வருவாயா?

எமது குடும்பத் தலைவியின் ஆண்டுத் திவசம் இன்று (01 — 01— 1999) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து இடம் பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள்,**
**மருமகன், பேரப்பிள்ளைகள்.**

699/2 கே, கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(61673)

## 30 ஆவது ஆண்டின் முழுநிறைவின் பூரிப்பில் தித்திக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

### V. S. P. ஸ்பெஷல் லஞ் ஒயில்

"எண்ணெய்ச் செலவு பிள்ளைகள் வளர்த்தியில்" என்பார்கள். பிள்ளைகளின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல
பூப்பெய்திய மங்கையர்க்கும் மகப்பேற்றுத் தாய்மாருக்கும் அருமருந்தாகத் திகழ்வதுடன்
30 ஆண்டுகளாக வட இலங்கையில் சுகாதார அதிகாரிகளின் நற்சான்றிதழ் பெற்று
வாடிக்கையாளர்களின் பாராட்டைப் பெற்றவர்கள்:

### பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(61534)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ திறப்பு விழா ★

**இலவச வைத்திய சேவை**
**FREE MEDICAL SERVICE**

இன்று 1-1-99 காலை 10 மணி
கியுமடிகா 'பிள்ளைகள் இல்லம்'
கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்.

(61814)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் நாராயணன் ஆச்சாரி

யாழ்ப்பாணம் 8/2, பெருமாள் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் நாராயணன் ஆச்சாரி 30-12-98 புதன்கிழமை கண்டியில் காலமாகி விட்டார்.

அன்னார் காமாட்சி அம்மாவின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (ராசா), காலஞ்சென்ற விஸ்வநாதன், ஆனந்தன், பாஸ்கரன், பத்மாவதி, இந்திராணி, செந்தில்மணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவன் ஆச்சாரி, நாகராசா, சுப்பிரமணியம், விஜயலெட்சுமி, அமுதவல்லி, நாகேஸ்வரி, மலர்விழி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று கட்டுக்கலை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கண்டி பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நா. பாலசுப்பிரமணியம்** (ராசா) (மகன்),
**பேரப்பிள்ளைகள்.**
துர்க்கா நகைத்தொழிலகம்,
சுன்னாகம்.

(61823)

## தம்பு அமிர்தலிங்கம்

(கோட்டக்கல்வி அலுவலகம், சண்டிலிப்பாய், உடுவில்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு அமிர்தலிங்கம் 31-12-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பரனிரூபராணி (ராணி) யின் அன்புக் கணவரும் அகிலதாசன், ஜெகஜீவன், ஜெயகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நேசராசா (வவுனியா), தர்மகுலதேவி (கொழும்பு), தர்மராணி, கேதீஸ்வரன் (கொழும்பு), பரமேஸ்வரி, சுரேந்திரன் (இத்தாலி), ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேஸ்வரி (வவுனியா) காலஞ்சென்ற பொன்னுத்துரை ஜெகநாதன் (இலங்கை மின்சார சபை), நாகேஸ்வரி (கொழும்பு), பாலசிங்கம் (யாழ். மாநகர சபை), வசந்தகுமாரி, சந்திரகுமார் (கட்டடப் பொருள் கூட்டுத்தாபனம்), அமலஉற்பவதாசன் (பிரான்ஸ்), சந்தானதாசன் (ஓமான்) ஆகியோரின் அன்புமைத்துனரும் ரதி (பிரான்ஸ்), வசந்தாதேவி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து 2-1-99 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு புனித செபஸ்தியர் ஆலயத்தில் திருப்பலியின்பின் அளவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அ. அகிலதாசன்**
(மகன்)
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(61830)

## பொன்னம்பலம் முத்துக்குமாரு

(இளைப்பாறிய சங்கீத விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன். முத்துக்குமாரு அவர்கள் 31-12-98இல் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமலரின் அன்புக் கணவரும், வேல்முருகதாஸ் (U.K), சண்முகதாசன் (கனடா), காலஞ்சென்ற கணேசதாசன், சிவதாசன் (இந்தியா), ஜனரஞ்சினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நவநீதகிருஷ்ணன், மகேந்திரராணி (U K) ஆகியோரின் மாமனாரும் பொன். தெய்வேந்திரத்தின் (சங்கீத விரிவுரையாளர், கோப்பாய்) சகோதரரும், ஜெனனி, யாழினி, சதாசிவகுமாரன், சிவறஞ்சினி, உமாதேவி, கயனி, யாதவன், சேயோன்ஸ்ரீபன், தோமஸ் கணேஸ் ஆகியோரின் பேரனும் ஜெயராணி, கௌரி மனோகரி (வைத்தியர்-கொழும்பு) சிவரூபன் (விரிவுரையாளர்-விவசாய பீடம் யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 01-01-99 பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத் தருகிறேன். இத் தகவலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்;
**க நவநீதகிருஷ்ணன்**
**(நவமணி)**
(மருமகன்)
இலங்கை வங்கி முன்பாக
கே. கே. எஸ். றோட்,
சுன்னாகம்.

(618391)

## நீதியோடு...

(முதலாம் பக்கத்தொடர்)

ளார்.

அரச தரப்பினருக்கும், எதிர்க் கட்சியினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் தனித் தனியே சமாதானத்துக்கு அழைப்பு விடுத்து யாழ். ஆயர் செய்தி விடுத்துள்ளார்.

### அரச தரப்பினருக்கு

போரின் மூலம் சமாதானம் என்ற சுலோகத்தை தவிர்த்து அமைதிக்கான தீர்வைப் பேச்சளவில் வைத்துக் கொள்ளாமல், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக காலத்தை இழுத்தடித்து அழிவைப் பெருக்கிக் கொள்ளாமல் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வுக்கான செயல் திட்டத்தில் திடகாத்திரமாகத் துணிந்து இறங்குங்கள்.

### எதிர்க் கட்சியினருக்கு

உங்கள் கட்சி நலனை முதலாவதாகக் கருதாமல் நாட்டு நலனை மேலாகக் கருதுங்கள். மக்கள் சுபீட்சத்தை மனதில் வைத்து அரசுடன் தீர்வுக்கான முழு முயற்சிகளில் இதய சுத்தியுடன் ஒத்துழைத்து ஒற்றுமையைக் காணும் முயற்சியில் தீவிரமாக இறங்குங்கள்.

### தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு

மாவீரர் தினத்தில் சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞையை தலைவர் விடுத்தது மீண்டும் அமைதிக்கான நம்பிக்கைக் கீற்றுக்களைத் தந்துள்ளது.

தமிழ் பேசும் சிறுபான்மையினர் நீண்டகாலப் போரினால் நலிந்து அழிந்து வரும் வேளையில் போரினால் மட்டுமே எமக்கு விடுதலை கிடைக்கும் என்ற கொள்கையிலிருந்து விலகி பேச்சுவார்த்தை மூலம்—கலந்துரையாடல், விட்டுக்கொடுத்தல், சமரசப்போக்கு என்பவை மூலம்—தீர்வு காண முன் வாருங்கள்.

போராட்டத்திலும் உங்கள் நடவடிக்கைகளிலும் அதி தீவிரப் போக்கை குறைத்து பொதுமக்களின் பாதுகாப்பில் விசேட கவனமும் கரிசனையும் காட்டும்படி மனிதாபிமானத்தின் பெயரால் வேண்டுகிறோம்.

### தமிழ்க் கட்சிகளுக்கு

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற கொள்கையின் படி எல்லோரும் ஒன்றாகும் போது தமிழர்களின் குரல் ஏகோபித்த வலுவான சக்தியாக மாற முடியும்.

தமிழ் மக்களின் பொது நலனுக்காக தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து ஒன்று சேரும்படி அழைக்கிறோம்.

புத்தாண்டு அமைதிக்கான நம்பிக்கையைத் தரும் ஆண்டாக மலர ஆசிக்கிறோம். தமிழ் பேசும் நல்லுலகுக்கு எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். (இ)

**றீகல் வீடியோ**
**றீகல் டாக்கீஸ்**

ஈச்சமோட்டை.

**ஸ்தாபனத்தாரின்**
**புதுவருட வாழ்த்துக்கள்**

40 அடி அகல திரையில் ஸ்ரீறியோ ஸ்போனிக் சவுண்டுடனும்

குறிப்பு;
பெண்களுக்கு என்று தனி BOX சீற் அமைக்கப்பட்டுள்ளது,

**10-30** மணிக்கு
**பிரபுதேவா - அரவிந்தசாமி**
நடித்த
**மின்சாரக்கனவு**
நேரடி CD

**2-30** மணிக்கு
**ரஜனி - சத்தியராஜ்**
**பாக்கியராஜ்**
நடித்த
**நான் சிவப்பு மனிதன்**
CD வெளியீடு

(61835)

# மாட்டிறைச்சிக் கடை

(கைதடி)

மாடிறைச்சி விற்பனை **2-01-1999** சனிக்கிழமை தொடக்கம் நடைபெறும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். எஸ். சோமு
(உரிமையாளர்)

(61831)

# அம்பாள் பார்மசி அன்ட் குறோசரி

நிறுவனத்தாரின் புதுவருட வாழ்த்துக்கள்

❀ பால்மாவகைகள் ❀ பாடசாலை உபகரணங்கள்
❀ புகைப்படச்சுருள்கள் ❀ கேக்தயாரிக்கும் பொருள்கள்

மற்றும்

பிஸ்கட் குறோசரிப் பொருள்களை
ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

**அம்பாள் பார்மசி**
**அன்ட் குறோசரி**

இல 1, நவீன சந்தை சாவகச்சேரி.
T. P. 070-212305

(சி/5978)

# N. C. A கல்வி நிலையம்

முதலாம் கட்டை, பருத்தித்துறை.

## A/L 2001 கலை, வர்த்தகப்பிரிவு

ஆரம்பம்: 01 - 01 - 99 வெள்ளி

**எமது தனித்துவமிக்க ஆசிரியர் குழு**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. அன்ரனி |
| கணக்கீடு | — | திரு. பார்த்தீபன் |
| வணிகக்கல்வி | — | திரு. உதயமோகன் |
| பொது அறிவு | — | திரு. லோகசிங்கம் |
| தமிழ் | — | திரு. அமரசிவம் |
| அளவையியல் | — | திரு. சத்தியசீலன் |
| இந்துநாகரிகம் | — | திரு. ரதீஸ் |
| | — | திரு. ராஜேஸ்கண்ணா |

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

நேரசூசி: 1 — 2 பொருளியல்
2 — 3 அளவையியல்

- நிர்வாகி

(சி/5970)

# மரண அறிவித்தல்

திருமதி
## நவமணி தம்பிமுத்து

பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளியைச் சேர்ந்த திருமதி நவமணி தம்பிமுத்து 31-12-98 பிற்பகல் 1.30 மணியளவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பிமுத்து (மலாயன் பென்சனியர்) அவர்களின் பாசமிகு மனைவியும், நவரத்தினராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், நல்லூர்), குணரத்தினராசா (ஓய்வுபெற்ற லிகிதர், கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம், மன்னார்), மகாதேவன் (முன்னைநாள் நடுக்கட்டு உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை, தற்பொழுது நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயசரஸ்வதி, நவரத்தினராசா (உடுவில்), பரமேஸ்வரி குணரத்தினராசா (ஓய்வுபெற்ற ஆசிரியை, மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ. க. த. க. பாடசாலை), அருந்ததி மகாதேவன் (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுகுணா உதயகுமார் (ஜேர்மனி), மேகலா (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி கொழும்பு - 6), குகன் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி A/L 99 வர்த்தகம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கார்த்திகனின் (ஜேர்மனி) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (1 - 1 - 99) காலை 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ந. குணரத்தினராசா**
(மகன்)
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(61832)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று பஞ்சரத பவனி

காரைநகர், ஜன. 1

ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர் சிவன் கோயிலின் திருவாதிரை உற்சவ தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்றுகாலை முதல் சிவன், ஐயனார் ஆகிய மூலமூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.00 மணிக்கு பஞ்சரத பவனி இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை அதிகாலை நடேசர் அபிஷேகமும், ஆருத்திரா தரிசனமும் நடைபெற்று பிற்பகல் 3-00 மணிக்கு திருவூஞ்சல் காட்சியும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரால் விசேட பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் காரைநகர் கடற்படையினரால் போக்குவரத்துக்காக விசேட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. காரைநகர் சிவன்கோயில் அன்னதான சபையினர் தினமும் அன்னதானம் வழங்கி வருகின்றனர். (ஐ-ரீ-8)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்பட்டுள்ளது. மூதூர்-திருமலைக்கான தரைப்பாதைக்கு மேலாக ஆறு அடித்தண்ணீர் பாய்வதாகக் கூறப்பட்டது,

வவுனியாவில் தொடரும் மழையால் பூந்தோட்டம், வேப்பங்குளம் அகதி முகாம்களில் உள்ள அகதி மக்கள் அங்கிருந்து இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனிக்குளம் பெருக்கெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவித்தன. (இ-3-ரீ)

## யுத்தத்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இன்று பிறக்கும் இனிய புத்தாண்டில் சமாதானம், நிம்மதி, சுபீட்சம் எமது மக்களுக்கு ஏற்படவேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம். இந்த ஆண்டில் கொடூரயுத்தத்துக்கு முடிவுகாண சகல தரப்பினரும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நலிவுற்றிருக்கும் மக்கள் நம்பிக்கையுடன் நிமிர்ந்து நிற்க திடசங்கற்பம் பூண வேண்டும்— என்றுள்ளது. (இ-3)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்)

டிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் குளம் ஒரு அடி ஏழரை அங்குலமும் கல்மடு குளம் ஒன்பது அங்குலமும் புதுமுறிப்பு குளம் எட்டு அங்குலமும் கனகாம்பிகைக் குளம் ஏழரை அங்குலமும் முருகண்டிக் குளம் எட்டு அங்குலமும் கோட்ட கட்டிய குளம் ஒன்பது அங்குலமும் வான் பாய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

தற்போதைய மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக நட்டாங்கண்டல் உலவநேரியில் 50 குடும்பங்களும் அலங்காமத்தில் 25 குடும்பங்களும் கரமுள்ளியானில் 58 குடும்பங்களும் கரமுள்ளியான் தேவாலயம் அருகில் 15 குடும்பங்களும் பால்நகரில் 35 குடும்பங்களும் அனிஞ்சயம் குளத்தில் 25 குடும்பங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

## வேலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தைச் சேர்ந்த அம்பிகை பாகன் பரந்தாமன் (18 வயது) என்பவர் கடந்த 27 ஆம் திகதி காலை யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள தமது வேலைத்தலத்துக்குச் சென்றதாகவும்—

நேற்று வரை அவர் தொடர்பான தகவல் எதுவும் இல்லை என்றும்— அவரது தந்தையான எஸ். அம்பிகைபாகன் முறைப்பாடு செய்துள்ளார். (இ-5-173)


INSTITUTE OF INFORMATICS STUDIES
JAFFNA, SRI LANKA.
(Affiliated with IMIS, UK)

1999 ஆம் ஆண்டு அமைதியும், சமாதானமும் நிறைந்ததாக அமையட்டும்.
மாணவர்கள், நண்பர்கள் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எம் இனிய
புது வருட வாழ்த்துக்கள்!

யாழ். மாவட்டத்தில் கணனித் துறையில் காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் நாம் இவ் ஆண்டு (1999 ல்) பல புதிய பாட நெறிகளையும், புதிய கணனித் தொழில் நுட்பங்களையும் அறிமுகப்படுத்த உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

1999 ஆம் ஆண்டுக்கான புதிய கணனி வகுப்புக்கள்

ஆரம்பம்:
வார. நாள் வகுப்புகள் 05-01-99
சனி, ஞாயிறு வகுப்புகள் 10-01-99
காலை 10.00 மணி

I. Australian Computer Society Examination:
a) Information Technology (Paper I)
b) Information Technology (Paper 2)
c) Programming & Software Technology.
d) System Analysis & Design.

II. Diploma Courses:
a) Diploma in MS OFFICE.
b) Diploma in Computer Programming.
c) Technician Diploma in Computer Hardware.

III. Certificate Courses:
MS-EXCEL, MS-WORD, MS-ACCESS, dBASEIII+, PASCAL, AUTO CAD, Visual Basic, C++, Page Maker, Corel Draw, Power Point

பிரித்தானிய IIMIS நிறுவனத்தின் Diploma, Higher Diploma சான்றிதழ்களுக்கான பயிற்சி நெறிகளை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம்.

மேலதிக விவரங்களுக்கு:
IIS, 68, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
IIS, நாவலர் மடம், நெல்லியடி.
IIS, ''சேக்கிவ் சென்ரர்'', சங்கானை.
IIS, நுணாவில் கிழக்கு, கண்டி வீதி, சாவகச்சேரி

DIRECTOR
(சி/5972)



சுப்பஸோ வீடியோ
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
ராஜ்கிரன், ரேவதி, வடிவேலு நடித்த தலைமுறை (பிரமிட் CD)
நெப்போலியன் நடித்த கவர்மெண்ட் (பிரமிட் CD)
சுப்பஸோ வீடியோ யாழ்ப்பாணம்.
(சி/5979)



எமது புதிய வெளியீடு
() மம்மி டடி
() விருதலை
நரேன் வீடியோ
140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/5977)



ஸ்ரீ செல்வா சினிமா
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
அனைவருக்கும் எமதுபுதுவருட வாழ்த்துகள்
ராஜ்கிரன், ரேவதி, வடிவேலு நடித்த தலைமுறை
(புதிய C. D வெளியீடு)
தினசரி 10.30 — 2.30 (பழைய நேரம்)
(61833)



எமது வீடியோ CD வெளியீடுகள்
★ பாசவலை
★ உள்ளே வெளியே
★ கலங்கரை விளக்கம்
★ நவராத்திரி
★ காத்தவராயன்
ஒறிஜினல் வெளியீடுகள்
குல விளக்கு
வருசம் 16
எங்க வீட்டு வேலன்
லட்சியம்
பொலீஸ் லாக்கப்
எங்கிருந்தோ வந்தாள்
கடல் மீன்கள்
நல்ல நேரம்
லக்கிமேன்
ஊழியன்
வீடியோ விமல் யாழ்ப்பாணம்.
(சி/5975)



வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஊழியர்கள் அனைவருக்கும்
காவேரியின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
உங்கள் மங்களகரமான பண்டிகைக்கால அனைத்து நிகழ்வுகளுக்கும் ஏற்ற
❀ பட்டுச் சாறி வகைகள், வேஷ்டிகள்
❀ புதிய ரகமான அனைத்து சாறி வகைகள், துணி வகைகள், றெடிமேட் ஆடைகள்
அனைத்தையும் உங்கள் மனம் போல் தெரிவு செய்திட நாடுங்கள்.
காவேரி சில்க்ஸ்
48, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(சி/5974)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனித்த
** புத்தாண்டு வாழ்த்துக்கள் **
❀ மங்கையர் மனங்கவர் அழகு சாதனங்கள் ❀ அன்பளிப்புக்கள் மற்றும் அனைத்து (F) பான்சிப் பொருள்களுக்கும்
நியூ பிரகாஸ்
NEW PRAGAS FANCY PALACE
63A, NEW MARKET, JAFFNA.
C/5928)



இணையற்ற சேவையில் உயர்ந்து விளங்கும் எம் நிறுவன வளர்ச்சியில் உறுதுணையான அன்பு உள்ளங்கள் அனைத்துக்கும்
எம் புத்தாண்டு வாழ்த்துக்கள்
அதிபர்
The Express Institute
IRUPALAI KOPAY
(61781)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-01-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org